திராவிடநாடு

-10-59 | வார வெளியீடு | விலை 16 காசு

ஏன் மறந்தாய்?

—[முத்துதாசன்]—

கன்னலுக்கும் செங்கனிக்கும் சுவைகொ டுத்த
கனித்தமிழின் சீர்குலத்தில் நீபி றந்து
இன்னலுக்கும் இறப்பிற்கும் சிறிது மஞ்சா
இனத்தினிலே தமிழ்மகனாய் நீம லர்ந்து
முன்னவனின் புகழெல்லாம் நீம றந்தாய்!
முதுதமிழின் பெருமைதனை நீஇ கழ்ந்தாய்!
பின்னோடி உயிர்காக்கும் இழிகு லத்தான்
பேச்சுக்கும் பதவிக்கும் நீப டிந்தாய்!

தம்மினத்தைக் கெடுக்கின்ற புலைய னுக்கு
தாள்கழுவிப் புகழ்பாடி வளைய லானாய்!
தம்மொழியை அழிக்கின்றான் யெனத்தெ ரிந்தும்
தந்தையென வணங்கிப்புகழ் பாடு கின்றாய்!
'நம்நாடு' நமக்கென்றால் துரோக மென்று
நம்மவரை வெஞ்சிறையில் தள்ளு கின்றாய்!
உம்முடலில் ஓடுகின்ற குருதி யெல்லாம்
உயர்தமிழின் குருதியென்று நினைக்க வில்லை!

செந்தமிழின் செல்வமெல்லாம் வடவர் கொண்டு
செல்வதைநீ பார்த்திருந்தும் பதுமை யானாய்!
நந்தமிழை வளர்த்திடவே எண்ணா மற்று
நலிவுற்ற இந்திதனை வளர்க்க லானாய்!
சொந்தநாட்டைப் பிறர்சுரண்ட விட்டு விட்டு
சொல்கின்றாய் "தென்னாடு செழிக்கு" தென்று
மந்திகுணம் படைத்தவர்க்கு நீப டிந்து
மறுவற்ற தமிழை நீம றந்தாய்!

நாட்டுக்குக் கேடுசெய்யும் வஞ்ச கத்தார்
நாதியற்று மடிகின்ற நாளு முண்டு!
கூட்டினிலே அடைபட்ட காளை யெல்லாம்
கூர்வாளை ஏந்துகின்ற வேளை வந்தால்
நாட்டினிலே பவனிவரும் நம்சி ரத்தை
நறுக்கிடுவார்! பிணமாக்கிக் [illegible]
கோட்டைமதில் கட்டிடுவார்! கொள்கை யுள்ள
கொடி தன்னை ஏற்றிடுவார், தென்ன கத்தில்!

"வறுமையும் அறியாமையும்"

—[ச. கனகராசன்]—

மூணாறு, செப். 17—

"குண்டரை (கேரளம்) என்ற ஊரின் சந்தை அருகே நிறையப் பிச்சைக்காரர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களில் ஒரு பிச்சைக்காரி தனது மகனின் கண்ணைக்குத்தி, கட்டைகளை அடுக்கி, 'தீ' வைத்தாளாம். இதற்கு மற்றப் பிச்சைக்காரர்கள் உதவி செய்தார்களாம். இதை அறிந்த போலீசார், அப்பையனை சிகிச்சைக்காக மருத்துவசாலையில் சேர்த்து விட்டு, அத்தாயையும், மற்றும் உடந்தையாக இருந்த பல பிச்சைக்காரர்களையும் கைது செய்துள்ளார்கள். தனது மகனின் கண்ணைக்குத்தி 'தீ'யினால் சுட்ட காயங்களை உண்டு பண்ணி அவனை மக்களிடம் காட்டிப் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டாளாம் அத்தாய்."

இந்தச் செய்தியை 'தமிழ்நாடு' நாளிதழில் பார்த்த எவர் மனமும் இளகாது இருக்க முடியாது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற்போல் இருக்கும்! இதனை அறியும்போது கண்ணீர் பெருகுகிறது. வேதனையாக இருக்கிறது. உடல் நடுங்குகிறதல்லவா?

அந்தத் தாய்—பத்து மாதம் சுமந்து பல இன்னல்களுக்குப் பின் பெற்ற தன் ஆசை மகனின் கண்ணைக் குத்தினாளாம்! 'கண்ணே! மணியே! கற்கண்டே! தேனே!' என்றெல்லாம் கொஞ்சி மகிழவேண்டிய தாய், ஏதுமறியா இளம் பாலகனின் 'குறு, குறு' பார்வை காட்டும் விழியைக் குத்தியிருக்கிறாள்! பாலூட்டி, சீராட்டி வளர்க்கவேண்டிய தாய் சிறிதும் மனமிரக்கமில்லாமல் கண்ணைப் புண்படுத்தியிருக்கிறாள்! இதற்குக் காரணம் என்ன?

பிச்சைக்காரியான அத்தாய், வீடு தோறும் சென்று 'அம்மா தாயே! சாப்பிட்டுப் பல நாள் ஆகிறது. குடலைச் சுருட்டுது, ஒரு கவளம் சோறு போடு தாயே!" என்று கேட்டிருக்கிறாள். போடுவார் யார்? அவரவர்களும் ஒருவேளைகூட ஒழுங்காக உண்ண முடியாமல் இருக்கும்போது எப்படிப் பிச்சையிடுவார்கள்? 'வீட்டுக்கு வீடு வாசற்படி' நிலைதானே காணப்படுகிறது. கேட்டுக் கேட்டுப் பார்த்துப் பயனில்லாமல் போகவே, இதுதான் நல்லவழி என்று கருதித், தான் பெற்ற மகனின் கண்ணைக் குத்திப் புண்ணாக்கி, குருடன் என்று சொல்லி, காட்சிப் பொருளாகக் காட்டிப் பிச்சை வாங்கலாம் என்று திட்டமிட்டுக் கண்ணைக் குத்தியிருக்கிறாள். அதற்குள் போலீசார் கைது செய்திருக்கின்றனர். பெற்ற மனம் பித்து என்கிறார்களே, இருந்தாலும் அவள் மனம் கல்லாக இருந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? வறுமைதான். வறுமையில்லாவிட்டால் இது போன்று செய்திருக்கமாட்டாள். கைது செய்யமட்டும் போலீசார் இருக்கிறார்கள். ஆனால், அவள் சொல்லும் காரணத்தைப் போக்க ஆள் கிடையாது, இந்நாட்டில்.

இதுபோன்ற செய்திகள் நாள் தோறும் நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன. விடுதலைபெற்ற நாடு என்கிறார்களே, வறுமையிருக்கலாமா? பல வளம் பெற்ற நாடு ஏன் பட்டினிக் காடானது? தங்கம் தவழ்ந்த நாட்டில் தரித்திரம் இருப்பது ஏன்? கனி குலுங்கும் சோலையாம் நம் நாட்டில் கஞ்சிக்குவழியின்றித் தவிப்பது ஏன்? —என்றுதானே கேட்கவேண்டியிருக்கிறது.

இந்தச் செய்தியைக்கேட்டு வேதனையோடு இருக்கும்போது இன்னொரு செய்தி நமது உள்ளத்தை உறுத்தும் வண்ணம் தினத்தாளில் வந்துள்ளது.

* * *

"திருப்பதி ஏழுமலையான் கோயிலின் வாயிற் கதவும், வாசலிலிருந்து மூலஸ்தான மண்டபம் வரையிலிருக்கும் எல்லாக் கதவுகளும் தங்கக் கதவுகளாக மாற்றப்படும்"

"ஆண்டவன் கட்டில் இப்போது வெள்ளியால்செய்யப்பட்டிருக்கிறது. இனித் தங்கக் கட்டிலாகச் செய்யப்படும்"

"வெங்கடேசப் பெருமாளின் உண்டியைக் கட்டுவதற்காக இப்போது இரும்புச் சங்கிலி பயன்படுத்தப்பட்டு வருகிறது; இது இனி வெள்ளிச்சங்கிலியாக மாற்றப்படும்"

"ஆண்டவனுக்குப் படைக்கப்படும் உணவுவகைகள் இனி வெள்ளிச் சாமான்களில் படைக்கப்படும்."

திருப்பதியில் கோலாகலமாக கொலுவீற்றிருக்கும் ஏழுமலையானுக்கு என்னென்னவோ ஏற்பாடுகள் செய்கிறார்களாம்! நினைத்தாலே பெருமூச்சு வெளிவருகிறது!

"பக்தகோடிகளே! பக்தகோடிகளே! எனது இருப்பிடத்தில் உள்ள இரும்புக் கதவுகளை அகற்றித் தங்கக் கதவுகளாக மாற்றுங்கள். எனது கட்டில் இனி வெள்ளியால் இருக்கக் கூடாது தங்கத்தால்தான் இருக்க வேண்டும். எனக்குப் படைக்கப்படும் உணவுவகைகளைப் பித்தளைச் சாமான்களில் படைக்கக்கூடாது. இனி வெள்ளிச் சாமான்களில்தான் படைக்கவேண்டும் என்று, ஏழுமலையான் கட்டளையிடுகிறாரா? இல்லையே! அறியாமையின் காரணமாக ஆண்டவனை மகிழ்விக்கிறார்கள்! ஏன் இந்த ஆடம்பரச்செலவுகள்?

வறுமையால் தன் மகனின் கண்ணைக் குத்தினாளாம், பிச்சை கேட்பதற்காக, அங்கே — குண்டரையில். ஆனால் திருப்பதியில் ஏழுமலையானுக்குத் தங்கத்திலே கட்டிலும் கதவுகளும் உணவு வகைகளைப் பரிமாற வெள்ளிச் சாமான்களுமாம்! என்ன ஆர்ப்பாட்டம்? விந்தையாக இருக்கிறது அல்லவா?

அங்கே அத்தாயைப் போன்றோர்கள் வறுமையால் செய்யாத காரியத்தை செய்கிறார்கள். இங்கே அறியாமையால் பக்தகோடிகளின் பணத்தால் படோடபமான ஏற்பாடுகள்.

இரண்டையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது நெஞ்சம் 'பகீர்' என எரிகிறது. இந்த நாட்டில் பட்டினிப் பட்டாளங்கள் பட்டிதொட்டிதோறும் பவனி வருகின்றன. அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க நாதியில்லை.

ஆனால் அறியாமையின் காரணமாக ஏழுமலையானுக்குச் செய்யும் திருப்பணியைப் போன்று பணத்தைக் கொட்டியழிக்கிறார்கள்-ஆண்டவனின் பெயரால்—நாள்தோறும்.

வறுமை, அறியாமை இரண்டையும் அழித்தால்தான் நாடு நன்றாக வாழமுடியும்.

இந்த வறுமையும், அறியாமையும், இதுபோன்று சமுதாயத்தில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளும் என்றுதான் நம்நாட்டைவிட்டு விலகப் போகிறதோ?

பாதையோரவாசிகள்!

ர் 18]   ஆண்டுச் சந்தா ரூ. 8.   (11—10—59)   தனிப் பிரதி 16-காசு   [இதழ் 13

நம்நாட்டில் — குறிப்பாகச் சென்னை நகரத்தில் வாழும் பாதையோர வாசிகளின் பரிதாப நிலையைப் பற்றி நாம் பலதடவை எடுத்துக்காட்டி, அவர்களது கொடுமைமிக்க வாழ்வுக்கு அரசாங்கம் யாதாயினும் பரிகாரம் காணவேண்டும் என்று கூறிவந்திருக்கிறோம். என்றபோதிலும் கூறுபவர்கள் யார்? நம்மவரா? எதிர்முகமினரா? என்பதை அறிவதில் அவர்கள் கண்ணும் கருத்தும் வேலைசெய்யத் தொடங்கி, அவ்விதம் கூறுபவர்கள் எதிர்முகமினர் என்று தெரிந்துவிட்டால், "ஓ! இவர்களா? இவர்களுக்கு இதைத்தவிர வேறு வேலை என்ன இருக்கிறது? அரசாங்கத்தைக் குறைகூறுவதுதானே இவர்களது குறிக்கோள். இவர்கள் குறைகளை எடுத்துக்காட்டுவதா? அவற்றை நாம் ஒப்புக்கொண்டு, தீர்வுகாண முயல்வதா? இது எவ்வளவு கேவலம்! நம்முடைய மதிப்பும் பவிசும் என்ன ஆவது?'' என்ற போக்கிலேயே காங்கிரஸ் அரசாங்கம் நடந்து வருகிறது.

எந்த நல்ல காரியமானாலும், அது எவ்வளவு முக்கியத்வம் பெற்றதாயினும், அதனை எதிர்க்கட்சியினர் எடுத்துக்காட்டி, அதற்கு யாதாயினும் பரிகாரம் காணுங்கள் என்று கூறிவிட்டால் போதும், உடனே தங்கள் இரதகஜதுரகபதாதிகள் சகிதம் கிளம்பி, அவ்விதம் கூறிய எதிர்க்கட்சியை 'எல்லாம் தெரிந்த' இவர்கள் ஏசத் துவங்கி, அதில் எல்லையில்லா இன்பம் காணுவதில் எல்லை கடந்து செல்வதை நாம் ஒருமுறை இருமுறை அல்ல, பலதடவை கண்டிருக்கிறோம்—கவனித்துக்கொண்டும் இருக்கிறோம்.

நாம்தான் எதிர்க்கட்சியினர்—அரசாங்கம் செய்யும் 'நல்ல' காரியங்களைக்கூடத் தவறென்று கூறுகிறோம் — வைத்துக்கொள்வோம் வாதத்திற்காக! ஆனால், இதோ, நாம்கூறும் குறைகளையே யாரோ எடுத்துக்காட்டி இடித்துரைக்கிறார்களே! யார் இவர்கள்? ஒருவேளை இவர்களும் எதிர்க்கட்சியினர்தானோ? என்று எண்ணி இறுமாந்து இருந்துவிட முடியாது. கூறுவது நாமல்ல. நாம் இந்த அளவுக்குக் காரசாரமாகவும், கடுமையாகவும் சொற்களைப் பயன்படுத்தமாட்டோம். அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கு ஒரு அளவு உண்டல்லவா? அந்த அளவைமீறி ஆத்திரப்பட்டு ஆகாத சொற்களால் அரசாங்கத்தைத் திட்டுவதோ அல்லது கண்டிப்பதோ நமக்குப் பழக்கமில்லாத ஒன்று.

ஆனால், அரசாங்கத்தின் பாதுகாப்பிலே தங்கள் கவனம் முழுவதையும் செலுத்துவதையே தமது குறிக்கோளாகக்கொண்டு செயல்படும் திசையில் இருந்து கிளம்பியுள்ளதின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

"சர்வஜன க்ஷேமத்திற்குப் பாடுபடுவது தங்கள் குறிக்கோள் என்று நமது அரசாங்கம் பிரகடனம் செய்து வருகிறது. ஆனால் இந்தப் பாதையில், சென்ற பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளில் நாம் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம்? **வரைகடந்து பெருமை பேசுவோர்,** சென்னை போன்ற நகரங்களை முழுதுமல்லாமல் போயினும், ஒருசில பகுதிகளையாவது கால்நடையாகச் சுற்றிப் பார்க்கட்டும். அவர்கள் காணும் **கோரக் காட்சி** அவர்களை **மனமிடியச்** செய்யும். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இரவு பகலாக நடைபாதையிலேயே வசிக்கும் வேதனை ஈவு—இரக்கமுள்ளவர்கள் **சிறிதும் சகிக்கக்கூடியதல்ல.** ரஸ்தா ஓரத்திலேயே அவர்கள் கிடைத்ததைச் சமைப்பதும், உண்பதும், உறங்குவதும், அங்கேயே தங்கள் குழந்தைகளை வளர்ப்பதும் பார்ப்போரை **இரத்தக் கண்ணீர் வடிக்கச்** செய்யும். இந்த மக்களுக்கு வாழ்வில் என்ன நம்பிக்கை இருக்கக்கூடும்? தங்க இடமின்றி, உடுக்கப் போதிய துணியின்றி, அடுத்த நாள் உணவு எப்படிக் கிடைக்கும் என்ற அறியாத நிலையில், அவர்கள் என்ன மனக்கோட்டை கட்டமுடியும்? அவர்களும் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களல்லவா?

சமுதாய நலத்திற்குப் பொறுப்பேற்றுக்கொண்டுவிட்டதாக கூறும் அதிகாரிகளின் திருஷ்டி ஏன் இந்த ஆயிரக்கணக்கான நடைபாதைக் குடும்பங்கள்மீது விழவில்லை? செல்வங்களுக்கெல்லாம் செல்வம் என்று குழந்தைகளைப் பண்டித நேரு பம்பாய்க் கூட்டமொன்றில் பெருமிதத்துடன் புகழ்ந்திருக்கிறார். ஆனால் நடைபாதைக் குடும்பங்களிலுள்ள குழந்தைகளும் அத்தகைய செல்வங்களல்லவா? எனினும் அவற்றின் உடை, உணவு, அல்லது கல்விபற்றிக் கவனிப்பவர் உண்டா? புதிய, புதிய கட்டடங்கள், அல்லது சில பெரிய தொழிற்சாலைகளைச் சுட்டிக்காட்டி நாம் **முன்னேறிவிட்டதாகப் பேசுவதில் அர்த்தமில்லை.** நம்மைப் போன்ற மனிதர்கள், நம் நாட்டிலேயே பிறந்தவர்கள், பிரஜா உரிமைக்கு உரியவர்களாயினும், அது இன்னதென்றே அறியாதவர்கள், இத்தகையோர் ஆயிரக்கணக்கில் நம்மிடையே, நம் கண்முன்பே **இருக்கி**

களிலும் கேவலமாகக் காலந்தள்ளுவது போன்ற கொடுமை வேறெந்த நாகரிக நாட்டிலாவது உண்டா? எல்லா மக்களுக்கும் சம சந்தர்ப்பமளிப்பதுபற்றி முழக்கும் தலைவர்கள் நடைபாதை தவிர, வேறு கதியில்லாத மக்களுக்கு அத்தகைய சந்தர்ப்பமளிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்?''

மேலே உள்ள கருத்துக்களைச் "சுதேசமித்திரன்" ஏடு 7—10—59-ல் தலையங்கமாக வெளியிட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியே இது.

இனிமேலாவது நாட்டின் உயிர்நாடிகளான இந்தப் பாதையோர வாசிகளின் பரிதாப நிலைமை மாற்றி அமைக்க அரசாங்கம் தனது கண்ணை கூர்மையாக்கிக், கருத்தைத் தெளிவாக்கிக் காரிய மாற்ற முன்வருமா—முயலுமா, அல்லது எங்கள் திட்டம் ஏட்டிலும், செயல் பேச்சிலும்தான் என்ற அள வோடு நின்று, நாட்டை மேலும் மேலும் நலியச் செய்யுமா என்பதை இன்னும்தான் சிறிது காலத்துக்கு பொறுத்திருந்து பார்ப்போமே!

சரித்திரத்திலே...... திராவிடர்கள்!

[பி. வி. கிரி]

திராவிடர்கள் மேலை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு வணிக வளர்ச்சிக்கு வழி கோலினார்கள் என்றும், திருவிடத்தை எழில் இடமாக்கி வளமும் நலமும் காணச் செய்தார்கள் என்றும் சரித்திரங்கள் பேசுகின்றன. நமது முன்னோர்களின் சிறப்பியல்புகளையெல்லாம் கேட்கும் போதும், படிக்கும்போதும் நமது எண்ணமெல்லாம் தித்திக்கின்றது. அறிஞர் பெருமக்கள் கூறியிருக்கும் அரிய கருத்துக்களைக் காண்போம்:

"......சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பது காண்டலளவையாலும் மலையிலக்காகத் துலங்குவதாயிற்று, இற்றைக்கு 4500 ஆண்டுகட்கு முன் இந்தியா முழுமையும் திராவிடமேயென்று விளக்கி, நிலப் படப் புத்தகத்தில் (Atlas) படமும் எழுதப்பெற்றிருக்கிறது".

—மொஹெஞ்சொ—தரோ
அல்லது சிந்துவெளி நாகரிகம்.
மதிப்புரை—பக்கம்: 5

*

"இந்திய மக்களின் பண்டைத் தொகுதியில் முதன்மையாய் இருந்தவர்கள் திராவிட வகுப்பினரேயாவர்; அவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறிய ஆரியர், சித்தியர், மங்கோலியர் முதலான மற்றைக் குழுவினருடன் கலப்புற்றும்கூட மிகவும் வேறுபாடுற்றனர்."

—மறைமலையடிகள்.
"தமிழர் மதம்" பக்கம்: 3

*

"இந்நாட்டு மக்கள் பேசும் மொழிகளையெல்லாம் ஆரியம் திராவிடமென இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தென்னிந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழி திராவிடம்."

—எம். ஆர். பெருமாள் (முதலியார்)
M. A. L. T., M. E. S.
"இந்திய வரலாற்றுச் சுருக்கம்"
பக்கம்: 7.

*

"தென்னிந்தியாவின் தலைசிறந்த குடிகள் திராவிடர்களே என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை; இவர்கள் ஒரு வேளை புதிய கற்காலம் கொண்டே இங்கு வாழ்ந்திருக்கலாம்."

—கே. கே. பிள்ளை.
"தென் இந்திய வரலாறு" பக்கம்: 23

*

கி. மு. 1200க்கு முன் ஆரியர்கள் இந்தியாவில் இல்லை என வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். ஆரியர் இந்தியாவை அடைந்தபோது, அங்கு வாழ்ந்த மக்கள் பெரிய கோட்டை கொத்தளங்களும், செல்வ வளமும், நாகரிக உயர்வும், பேராண்மையும் உடையவர்களாக இருந்தார்கள் என்பன, ஆரியர்களின் வேதவாக்குகளிலிருந்தே அறியக்கிடக்கின்றன. வேதங்களில் திராவிட மக்கள் தாசர், அசுரர், தானவர், தைத்தியர் எனக் கூறப்படுவர்.

—ந. சி. கந்தையாபிள்ளை.
"வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழந்தமிழர்" பக்கம்: 135-136

*

"திராவிடர்கள் ஆதியில் இந்தியா வில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் நம் தேசத்தில்மட்டுமின்றி, அரேபியா, எகிப்து, பாரசீகம், முதலியபிரதேசங் களிலும் வசித்துவந்தனர். மத்திய தரைப்பகுதியினர் என்று உலகத்தில் அவர்களை அறிவார்கள். கங்கைக் கரையிலிருந்து மத்திய தரைக்கடல் ஸ்பெயின் தாமிரவர்ணமலை வரை யிலும் அவர்கள் பரவியிருந்தனர்"

—முல்க்ராஜ் ஆனந்த்
"இந்தியாவின் கதை" பக்கம்: 10-11

*

"திராவிட மொழியைப் பேசிய மக்கள் வேண்டிய அளவு சீர்திருத்த முடையவர்களாகவும், புதியவர்களை வென்றுவிடக்கூடிய தொகையின ராகவும் இருந்தனர்"

—ந. சி. கந்தையாபிள்ளை
"தமிழ் இந்தியா" பக்கம்: 27

*

"நில இயல் அடிப்படையில் தென் னாட்டின் பரப்பு கிட்டத்தட்ட மூந்நூ யிரம் சதுர மைல். மக்கள் தொகை ஏறத்தாழப் பத்துக்கோடி. ஆனா மொழியடிப்படையிலும் அரசியலடிப் படையிலும் திராவிட மொழி பேச படும் தென்னாடு அல்லது திராவி நாட்டின் பரப்பு இருநூற்றைம்ப ஞயிரம் சதுர மைல் ஆகும். அத மக்கள் தொகை எட்டுக் கோடிக் மேலாகும். இதில் தமிழ் பேசுவோ மூன்றுகோடி, தமிழ், திராவிடநா அல்லது தென்னாட்டுக்கு வெளியிலு பேசப்படுகிறது. தெலுங்கு பேசுவோ மூன்றுகோடி. கன்னடம் பேசுவோ ஒன்றேகால் கோடி. மலையாள பேசுவோர் முக்கால் கோடி. து பேசுவோர் பத்து நூறாயிரம்."

—கா. அப்பாதுரை, எம். ஏ. எல்.
"தென்னாடு" பக்கம்: 1

இத்துணை ஆதாரங்கள் இருந் 'திராவிடம்' கற்பனையாம்! என்னே அவர்தம் மதி!!

பகுத்தறிவு பெற்ற பரமசிவர்

(புல்லைபூதி)

அழகு நகரிலிருந்து காமகோடியம்மன் சுனைக்கு ஏழு கல் தூரமாவது இருக்கும். ஆண்டுதோறும் ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்றும், கிருத்திகைத் தினத்தன்றும் அம்மன் சுனையில் நீராடிப் புண்ணியம் பெறவேண்டியும், அங்குள்ள குன்றின் உச்சியிலுள்ள கோயிலில் குடிகொண்டிருக்கும் முருகக் கடவுளைத் தரிசித்து அவரருள் பெறவேண்டியும் மக்கள் திரண்டு வருவார்கள். நகரிலிருந்தும் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் மட்டுமல்லாமல் வெகு தூரத்திலிருந்தும் மக்கள் கால்நடையாகவும் வண்டிகளிலும் குழுமிவருவார்கள். அவர்களில் பலர் பாபவிமோசனம் பெறும் பொருட்டுச் சுனை நீரில் மூழ்குவார்கள். மூழ்கியவர்கள் கூட்ட நெருக்கத்தால் மேலெழமுடியாமல் மூச்சுத்திணறி மூழ்கியே போவதுமுண்டு. 'அரகர முருகா'க்களின் ஆர்ப்பாட்டத்தில் அகப்பட்டுக் கொண்டவர்கள் 'அவற்றின்' நசுக்கலினின்றும் மீளமுடியாமல் 'பரமபதம்' எய்துவதும் உண்டு. பக்தகோடிகள் மூழ்கிக் குளித்துக் கலக்கிச் சகதியான புண்ணிய தீர்த்தத்தைப் பருகியவர்கள் பொல்லாத தொற்று நோய்க்கு ஆட்படுவர்.

அபிஷேக ஆராதனை செய்வதில் மிகவும மும்முரமாக ஈடுபட்டிருந்தார் அனுமந்த சர்மா. அடிக்கடி கூட்டத்தை நோக்கிச் சுழன்றுகொண்டிருந்த அவரது விழிகள் நிலைத்து நின்றன. பூசையை மறந்து சர்மா திகைத்து நிற்பதைக் கண்டவர்கள், அவர் பார்வை செல்லும் பக்கம் திரும்பினார்கள். ஒரு இளைஞனும் யுவதியும், இளநகை அரும்பச் சர்மாவைப் பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தனர்.

ஆண்டவனைத் தரிசிக்க வந்தவர்கள் அதை மறந்து தங்களைத் தரிசித்துக்கொண்டு நிற்பதையுணர்ந்த இருவரும் அவ்விடம் விட்டு அகன்றனர்.

"பொருத்தமான ஜோடி ஐயா! அவளுக்கென்றே அவனையும், அவனுக்கென்றே அவளையும் ஆண்டவன் படைச்சிருக்கவேண்டும்!"

"சர்மாவுக்கு யாரோ தெரிஞ்சவங்க போலிருக்கு!"

"சாமியைத் தரிசிக்க வந்தவங்க ஏன் திரும்பிப் போயிட்டாங்க?"

"நமக்கெதுக்குங்க அந்த வீண் வம்பெல்லாம். வந்த வேலையைப் பார்த்துக்கொண்டு போவதை விட்டுட்டு?..."

சிறிது இடைவேளைக்குப் பிறகு பரமனின் திருக்குமரன் பக்தர்களின் உள்ளத்தில் குடிபுகுந்தார். தலையில் குட்டிக்கொண்டும் கன்னத்தில் போட்டுக்கொண்டும் சாமியின் பிரசாதத்திற்காகப் பக்தகோடிகள் கையேந்தி நின்றனர்.

அனுமந்த சர்மாவின் உள்ளம் ஒரு நிலையிலில்லை. கையேந்தி நின்ற அன்பர்களைத் தவிக்கவிட்டுத் தடதடவென்று படிகளிலிறங்கி வேகமாகச் சென்றார். "அர்ச்சகருக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதோ!" என்று முணுமுணுத்தார்கள், அங்கிருந்த மெய்யன்பர்கள்.

*

அனுமந்தசர்மாவைப் பெரும்பாலான மக்கள் வெறும் கோயில் அர்ச்சகர் என்ற அளவில்தான் தெரிந்துவைத்திருந்தனர். அவரைப்பற்றி அதிகமாகத் தெரிந்த ஒரு சிலரே, அவருக்குத் தெரியாத உலக விவகாரங்களே இல்லை என்று அறிந்திருந்தனர். தாம் சொல்வதை முகம் சுளிக்காமல் கேட்க ஆள் கிடைத்துவிட்டால், வாய் வலிக்காமல் மணிக்கணக்காகப் பேசிக்கொண்டே இருப்பார் சர்மா. பிள்ளையைக் கறி சமைத்துப் பரமனுக்களித்த புண்ணிய கதையிலிருந்து, வானத்தில்பறக்க விடப்பட்ட செயற்கைச் சந்திரன் வரை அவரது ஆராய்ச்சி வளர்ந்துகொண்டே போகும். கும்பமேளாவின் புனித தீர்த்தத்தைப் பற்றி அவர் வருணித்துக் கூறும்போது, அருகிலிருந்து கேட்போர் பரவசப்பட்டுப் போவார்கள்.

அலைகடலில் தத்தளிப்பவர்கள், சிறு துரும்பு தங்கள் கைக்குக் கிடைத்தாலும் அதையே உயிர் மீட்கக் கிடைத்த பெரிய பற்றுக்கோடாக நினைப்பார்களாம். அதுபோலவே, பரமசிவ ஐயர் அனுமந்த சர்மாவின் உதவியைச் சிறிய துரும்பாக எண்ணவில்லை; சிறிய படகாகவும் நினைக்கவில்லை; பெரிய பாய்மரக் கப்பலாகவே கருதினார்.

பரமசிவ அய்யரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிற்குப் இன்னும் ஆறே மாதங்கள் இருந்தன. தாரங்கள் நான்கு தவறிப் போனவர் அவர். 'பிள்ளை வேண்டாம்! வேண்டாம்!" என்று கூறும் அன்றுடங் காய்ச்சிகளுக்கு, "கொடுப்பேன்! கொடுப்பேன்!" என்று பிள்ளை வரம் அருளும் தெய்வம் பரமசிவ ஐயரிடம் ஏனோ ஓரவஞ்சனையாக நடந்துகொண்டது! ஐயர் சுற்றாத கோயில்களில்லை; குடிக்காத் தீர்த்தங்களில்லை; முழுகாத குளங்களில்லை.

தெய்வத்தின் மீது அவ்நம்பிக்கை கொண்டுவிட்ட பரமசிவ ஐயர், மந்திர தந்திரங்களில் நம்பிக்கை வைத்துப் பார்த்தார். தபால் மூலமாகவெல்லாம் பலாபலன்கள் கேட்டறிந்தார்.

அந்த நம்பிக்கையும் அற்றுப் போனபின், பெயர்பெற்ற டாக்டர்

ஜின் உதவியை நாடினார். நனகு அவரைப் பரிசோதித்த டாக்டர் கள், அவர் தலையில் கல்லைத் தூக் கிப் போடவில்லை; அதை இதயத் திலேயே போட்டுவிட்டார்கள். தீர் மானமாக அவர்கள் கூறியது இது தான்: அவருக்கு இனிக் குழந்தை பிறக்காது!

பரமசிவ ஐயர் உள்ளம் உடைந்து குமைந்து போனார். அந்த நேரத் தில்தான் அவருக்கு அனுமந்த சர்மாவின் தோழமை கிடைத்தது. தேனில் மருந்தைக் கலந்து தரு வதைப்போல, மனைவியை இழந்து வருந்தும் ஐயருக்குக் கூறிய ஆறு தல் வார்த்தைகள் கூடவே, அவ ரது ஐந்தாந்தாரப் பிரச்னையையும் ஆரம்பித்து வைத்தார் சர்மா.

சர்மாவின் சாதுரியப் பேச்சு, படித்துப் பரிசோதனைசெய்து அனு பவப்பட்ட டாக்டர்களின் கூற் றையே பரமசிவ ஐயரின் உள்ளத் தினின்றும் இருந்த இடந்தெரியா மல் எடுத்தெறிந்துவிட்டது. அவர் உள்ளத்தில் மீண்டும் நப்பாசை தளிர்விட்டது.

"என்னப்பன் திருவருளால் தீராத வினைகளுண்டா? பிறக்காத பிள்ளைகளுண்டா?" என்று ஆரம் பித்து, பத்திரசப் பாடல்களை உருக்கமாக ஆலாபனையோடு பாடி முடித்தார் சர்மா. சர்மாவின் உபதேசங்கள் விழலுக்கிறைத்த நீராகிவிடவில்லை; பெண் தேடும் படலம் தொடங்க, பரமசிவ ஐயரின் பெட்டிப் பணம் சர்மாவின் கையில் அடைக்கலம் புகுமளவுக்குச் சென் றது.

அனுமந்தசர்மா நேராகச் சிங்கை யூருக்குப் பயணப்பட்டார். வழியில், ஒருசீப்பு வாழைப்பழம், நாலு முழம் கதம்பம், மஞ்சள், குங்குமம் முதலியவற்றை வாங்கிக் கொண் டார். வாசனைப் புகையிலை என் றால் நாராயண ஐயருக்குக் கொள்ளை ஆசை. அதையும் இரண்டு மட்டை வாங்கி வைத்துக் கொள்ளச் சர்மா மறக்கவில்லை.

பொழுது சாய்ந்த நேரத்தில், நாராயண ஐயரின் வீட்டை அடைந்தார் சர்மா.

"வாருங்கள்! வாருங்கள்" என்று வாயெல்லாம் (பொய்ப்) பல்லாக வரவேற்றார் நாராயண ஐயர்.

"ஐயர்வாளுக்கு நல்ல சமாச் சாரந்தான் கொண்டு வந்திருக் கேன்!" என்று பெருமிதத்துடன் கூறினார் சர்மா.

"ரொம்பவும் சரி. என்ன, சௌக் கியந்தானே!" என்று குசலம் விசாரித்தார் ஐயர்.

"ஆஹா, அதுக்கென்ன — என் னப்பன் முருகன் இருக்கும் வரை யில் சௌக்கியத்திற்கென்ன குறைச்சல்!" என்று கூறிய வண் ணம், திண்ணையில் ஐயரின் பக்கத் தில் உட்கார்ந்தார் சர்மா.

"சீதா! அடியே, சீதா!"

"என்னப்பா?"

சர்மாவாள் வந்திருக்கா. அவ ளுக்குத் தீர்த்தம் கொண்டாடீ!"

சீதா டம்ளரில் கொண்டுவந்து கொடுத்த தீர்த்தத்தை ஒரே மூச் சாகத் தீர்த்துவிட்டுத் தமது பிரச் சினையைத தீர்த்துக் கொள்ளத் தொடங்கினார் சர்மா.

சர்மா கூறியவற்றை ஐயர் ஆட் சேபிக்கவில்லை. மாப்பிள்ளையின் வயதைப் பற்றித்தான் சிறிது யோசித்தார். சர்மாவால் அவரைச் சரிபடுத்தவா முடியாது?

நாராயண ஐயர்தான் என்ன செய்வார், பாவம். அறிவாளிகளுக் குப் பெண் குழந்தைகள் தாம் அதிகமாகப்பிறக்கும் என்ற தத்து வத்தின்படியோ என்னவோ, அவ ருக்குப் பிறந்திருந்த குழந்தைகள் ஏழும் பெண்களாகப் பிறந்துவிட் டிருந்தன. வீடு, வாசலாக வேறென்ன வேண்டும்?

முன்பெல்லாம் பரவாயில்லை; அண்டை அயலில் நல்லது பொல் லது நடக்குமென்றால் நாராயண ஐயர் இல்லாமல் நடக்காது. அவர் இட்டது சட்டமாக இருக்கும். ஏழை வீட்டுச் சடங்கில் மந்திரம் ஓதினால்கூட, ஏழு நாட்கள் ஐயர் வீட்டில் அமைதியாகப் பொழுது போய்விடும். பணக்காரர் வீடு களிலோ பலவகைத் தானியங்கள், பத்துவகைக் காய்கறிகள், அங்க வஸ்திரம், வேட்டி, புடவை, அது, இது...உம்...அதெல்லாம் அந்தக் காலத்தில். முன்பெல்லாம் ஐய ருக்கு வயதான பெரியவர்களின் ஆதரவாவது இருந்தது. இப் போது அவர்களெல்லாம்கூட அல்லவா இளைஞர்களுடன் சேர்ந்துகொண்டு தலையாட்டத் தொடங்கிவிட்டார்கள்!—ஊராரைப் பற்றிக்கூடக் கவலையில்லை ஐய ருக்கு. அவருடைய தங்கை மகன் —அவர் வீட்டுக்கு மருமகனாக வர வேண்டியவன்—வரதன்கூட அல் லவா மாறிவிட்டான்! ஐயர் அவனை எவ்வளவு நம்பியிருந்தார்! பயல் இப்படிக் 'கெட்டுப் போவான் என்று அவர் எண்ணவே இல் லையே! எல்லோருக்கும் ஜோஸ்யம் கூறிய அவருக்கு, என்னவோ பிழைத்துப் போகட்டுமென்று முன்பாகவே இந்த ஆருடம் தெரிந் திருக்கக் கூடாதா?

ஐயர் மிகவும் குழம்பிப்போயி ருந்த நிலையில்தான், சர்மா அங்கு வந்தார். காலமும் சூழ்நிலையும் சர் மாவின் பக்கம் ஒத்தாசை செய்து விட்டன. திருமண நாளையும் குறித் துக்கொண்டு, மறுநாள் சர்மா சிங்கையூரிலிருந்து அழகு நகருக் குப் புறப்பட்டார்.

சீதா விம்மினாள், வெதும்பினாள், அழுதாள், அரற்றினாள்.

வரதனுக்கு விஷயம் தெரிந்தது. "மாமா! இது முறையா? உங்கள் அகராதிப்படி நான் பொருள் இழந்து போனவனாகவே இருக்கட் டும்; அதற்காகச் சீதாவின்வாழ்வை ஏன் கெடுக்கப் பார்க்கிறீர்கள்? நான் போனால் போகிறேன்; சீதா வுக்கு வேறு நல்ல இடம் கிடைக்க வில்லையா? உங்கள் புத்தி பேத லித்துவிட்டதா?" என்று சடசட வென்று நாராயணஐயரின் எதிரில் பேசிவிட்டான் வரதன். ஒரு கணம் ஐயரே பிரமித்துவிட்டார். இது வரை இப்படி அவன் அவர் எதி ரில் நின்று பேசியதே கிடையாது. வந்துவிட்டது அவருக்குக் கோபம் "நாயே! பேயே!" என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிவிட்டு, "இனி இப்பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்காதே!" என்று கட் டளையிட்டுவிட்டு வேகமாக வீட் டிற்குள் சென்றுவிட்டார்.

நாராயண ஐயர் எங்கோ வெளி யில் போயிருந்த சமயம், வரதன் வீட்டிற்குப் போய்ச் சீதாவைச் சந்தித்தான். "என்ன உன்முடிவு?" என்றான். "இந்தத் திருமணம் நடக்காது" என்றாள் சீதா. "எந்த எண்ணத்தை மனதில்கொண்டு சொல்கிறாய்?" என்றான். "என்னை நீங்கள் கைவிட்டாலும் முழுக்கயிறு கைவிடாது" என்றாள். "மரணத் தைப்பற்றி எண்ணாதே! நமது எதிர்காலத்தைப்பற்றிக் கற்பனை செய்துகொண்டிரு. விரைவில் திரும்புவேன்" என்று கூறிவிட்டு, அங்கிருந்து அழகு நகருக்குப் புறப்பட்டான்.

பரமசிவ ஐயரைச் சந்தித்தான். வந்த காரியத்தைக் கூறினான். அவனிடம் அவர் ஓர் உறையஞ்சலை நீட்டினார். திகைப்புடன் அதை வாங்கி அதனுள் இருந்த கடிதத்தை எடுத்து விரித்துப் படித்தான்; கண்களால் எழுத்துக்களை விழுங்கினான்.

தந்தையே!

தாரமாக வேண்டியவள் தந்தையே என்றுஎழுதுகிறாளே எனத் திகைப்படையாதீர்கள். எனது தந்தையைக் காட்டிலும் பல்லாண்டுகள் மூத்தவரான தங்களைத் தந்தையே என்று எழுதாமல் வேறெப்படி எழுதுவேன்?

நினைத்துப் பாருங்கள்; தங்களுக்கு மகள் பிறந்திருந்தால், அவள் எனக்கு எத்தனையோ ஆண்டுகள் மூத்தவளாக இருந்திருப்பாளே — வயதில் அவள் எனக்கு அன்னையாக இருந்திருப்பளே!

வாழ்வின் எல்லைப் பாதையிலே தளர்நடை போடும் தாங்கள், மடந்தையொருத்தியின் வாழ்வைப் பாழாக்குவதிலே என்ன சுகம் காண்பீர்கள்?

என்மூலம் தங்கள் குலக்கொடி வளர்ந்து படரும் என்று எண்ணம் கொண்டிருக்கிறீர்களா? வெறுங் கனவு! வாழ்க்கையின் இனிமை இல்லறத்திலேதான் இருக்கிறது என்றால், தங்களுக்கேற்ற மனைவிளக்கைத் தேடிக் கொண்டிருக்கலாமே! ஒருவர் வாழ்வைச் சமாதியாக்கி, அதன் மீது இன்பக் கோட்டை கட்ட முனைந்தவர்களின் சோகக் கதைகள் ஆயிரமாயிரம் தெரிந்திருக்க வேண்டுமே தங்களுக்கு?

தந்தையே! என் மனக் கண்களில் தோன்றும் தங்களின் பர்தங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் சோரக் கெஞ்சிக் கேட்கிறேன்—என்னை மனைவியாக்கிக் கொள்ளும் எண்ணத்தைக் கைவிடுங்கள்.

பெண்களாகவே என் தந்தைக்கு நானும் என் ஆறு தங்கைகளும் பிறந்துவிட்ட பாவமும், சொல்லவொண்ணா வறுமை நிலையும் என் தந்தையின் உள்ளத்தை இக்கேடுகெட்ட முடிவிற்குக் கொண்டு வந்துவிட்டன.

காலம் எங்கள் குடும்பத்திற்கு நல்வழிகாட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. என் அத்தான் மிக நல்லவர். என்னை அவர் மணந்துகொண்டதும் 'காதல், காதல், தனிவாழ்வு, தனிவாழ்வு' என்று பறக்கமாட்டார். என் சகோதரிகளின் மணவினைகளைக் கவனிக்கும்பொறுப்புத் தம்முடையதென்று அவர் கூறிய உறுதிமொழியில் எனக்கு மாறாத நம்பிக்கை இருக்கிறது.

என் தந்தையின் முடிவைப் போலத் தங்களின் குறுக்கீடு என் வாழ்வில் ஏற்படாமல் இருக்குமானால், என் கண்கண்ட தெய்வமெனத் தங்களை நாளும் கைகூப்பித் தொழுவேன்.

தங்களிடமிருந்து நல்லபதிலை எதிர்நோக்கி ஏங்கிநிற்கும்;

மகள்,
சீதா.

வரதன் பரமசிவஐயரை நிமிர்ந்து நோக்கினான். அவன் பார்வை, "என்ன முடிவு?" என்று அவரை வினவியது.

புன்னகை அரும்ப அவர் கூறினார்: "சீதா என்மகள்!"

"இந்த மகிழ்ச்சியைச் சீதாவுக்குத் தெரிவிக்கவேண்டும், விடைகொடுங்கள்!" என்று குதித்தான் வரதன்.

"வேண்டாம், அவர்களே இங்கு வருவார்கள்" என்றார் ஐயர்.

சிறிது நேரத்தில் அங்கு ஒரு பச்சை நிறக்கார் வந்து நின்றது. அதிலிருந்து முதலில் இறங்கியவள் சீதா. அவளுடைய பெற்றோரும் சகோதரிகளும் ஒருவர் பின் ஒருவராக இறங்கிவந்தார்கள். மலர்ந்த முகத்துடன் எல்லோரையும் வீட்டிற்குள் அழைத்துச்சென்றார் ஐயர்.

எழுத்து மூலமாக அவர் காட்டிய முடிவு எல்லோரையும் திகைப்பும் வியப்பும் கொள்ளச் செய்தது. அவர் தமது சொத்து முழுவதையும் சீதாவின் பெயருக்கு மாற்றியிருப்பதைப் பத்திரம் ஆதாரபூர்வமாக அறிவித்தது!

"நான் படித்த கதைகளில்கூட இப்படி நிகழ்ந்ததில்லை!" என்றார் நாராயண ஐயர்.

"புராணங்களில் நிகழ்வதெல்லாம் வேறு விதமாகத்தானிருக்கும்" என்றான் வரதன்.

கடகடவென்று சிரித்து அவன் கூறியதை ஆமோதித்தார் பரமசிவ ஐயர்.

வரதனும் சீதாவும் சிறகுகட்டிப் பறக்கவில்லை; பரமசிவ ஐயரின் காரிலேறிக்கொண்டு பறந்தார்கள், காமகோடியம்மன் சுனையைநோக்கி. அம்மனையும் அய்யனையும் தரிசிக்க அல்ல: அனுமந்த சர்மாவைத் தரிசிக்க.

தரிசித்தார்கள். அவருள்ளத்தில் புயலை எழுப்பிவிட்டு, புன்னகை மலர, படிகளைவிட்டு இறங்கி நடந்தார்கள், கார் நின்றிருந்த இடத்தை நோக்கி.

நடக்கக்கூடாதது நடந்துவிட்டதே என்று அவர்களைப் பின்தொடர்ந்து நடந்தார், அல்ல, ஓடினார் சர்மா.

*

தங்களை நோக்கி வரும் சர்மாவைக் கடைக்கண்களால் பார்த்துவிட்ட வரதன், சீதாவுக்குக் கண் சிமிட்டி, "வரம் பெறுவதற்காக ஆண்டவனைத் தேடி வந்தாயா சீதா?" என்றான்.

"வரத்தைப்பெற வரவில்லை அத்தான்! சர்மாவின்முன் நாமிருவரும் காட்சியளிக்க வேண்டுமென்று தோன்றிற்று—அதற்காகவே உங்களை இங்கு அழைத்தேன்!" என்று சிரித்துக்கொண்டே கூறினாள் சீதா.

சர்மாவின் முகம் வெளிறியது. வந்தவழியே திரும்பிச் சென்றார். ஏக்கத்தோடு கூடிய விழிகளால் குமர முருகனை நோக்கினார். "சனியன்—பீடை—அக்ரமம் — அநியாயம்" என்று முணுமுணுத்தார். அந்த முணுமுணுப்பு, மந்திரத்தோடு மந்திரமாகக் கலந்துகொண்டது!

*

தூய்மையான காற்றோட்டமுள்ள இடத்தில் வசிப்பவன் தன்னையறியாமல் உடல்நலம் பெறுவதுபோல அழகான கலைகளின் மத்தியில் வளர்கிறவன் உயர்ந்த மனோபாவங்களைப் பெறுகிறான்.

மார்சிக்ளியோ

(கி. பி. 1274—1343)

மதக் குருமார்களுக்கும், மதச் சார்பற்றவர்களுக்கும் நெடுநாட்களாக நடந்துவந்த சச்சரவுகளில், பவேரியா நாட்டு லூயி மன்னனுக்கும் அப்பொழுது போப்பாக விளங்கிய, இருபத்திரண்டாவது ஜானுக்கும் இடையில் நிகழ்ந்த சச்சரவைச் சிறப்பாகக் கூறலாம். பவேரிய நாட்டு மணிமுடிக்கு உரிமை கொண்டாடிய இருவரின் வேண்டுகோள்களையும் புறக்கணித்து, மூன்ருவது நபர் ஒருவரைப்பவேரியாவின்மன்னனுக்கப் போப் முயற்சித்ததால், பவேரிய நாட்டில், மதச் சார்பற்ற ஒருவன் மணிமுடி தரிப்பதை எதிர்த்த போப்பின் அதிகாரத்தையே எதிர்த்து ஒரு சச்சரவு வளர்ந்தது. மற்றச் சச்சரவுகளில் எழுந்ததைப் போலவே, மேற்குறித்த சச்சரவிலும், அரசன், போப் இவர்களில் யார் உயர்ந்தவர் என்ற கேள்வியும், அரசன், போப் இவர்களுக்கென வகுக்கப்பட்ட வரம்புகள், கடமைகள் யாவை என்ற கேள்வியும் எழலாயின. திருச்சபைகளுக்குள்ளேயே எழுந்த சிறு சச்சரவுகள் லூயி மன்னனுக்கு ஆதரவளித்தன. திருச்சபைகளுக்குள்ளாகவே பூசல்கள் தோன்றக் காரணம், அக்காலத்துப் போப், பிரான்ஸிஸ்கன் சம்பிரதாயத்தைத் தழுவிய பாதிரிமார்களின் ஏழ்மைத் தத்துவத்தைத் தாக்கியதாகும். இதனுல் பிரான்ஸிஸ்கன் சம்பிரதாயத்தைப் பின்பற்றிய பாதிரிமார்களுக்கும் போப்புக்குமிடையே பகையும், கசப்பும் வளரலாயின. போப் ஜானுக்கும், பவேரிய நாட்டு லூயி மன்னனுக்கும் இடையில் நிகழ்ந்த சச்சரவில், அரசனது கட்சியை ஆதரித்தவர்கள் போப்பின் பகைவர்களான பிரான்ஸிஸ்கன்களோடு தொடர்புகொள்ளலாயினர். இவர்களில் "படுவா" என்ற நகரத்தைச் சேர்ந்தவரும், இத்தாலியருமான "மார்சிக்ளியோ" மிகத் திறமைவாய்ந்தவராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்சிக்ளியோ மதச் சார்பற்ற குருமார்களின் வகுப்பைச் சேர்ந்தவர். இஃதன்றி அவர் மருத்துவத் துறையிலும் மிகுந்த தேர்ச்சி பெற்று விளங்கினுர். சின்னுட்கள் அவர் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் டைரக்டராகப் பணியாற்றினுர். அவர் தீட்டிய "டிபன்சார் பாசிஸ்" மத்திய நூற்ருண்டுகளில் முதன்

கோ. கோதண்டராமன்

முதலாக எழுதப்பட்ட அரசியல் ஆராய்ச்சி நூல்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. இந்நூலில், மார்சிக்ளியோ ஏகாதிபத்தியத்தின் தன்மைபற்றியும், திருச்சபைகளின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாது, அது சுதந்திரமாக இருக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

பதினுறும் நூற்ருண்டில், மதச் சீர்திருத்தம் தோன்றும் வரையிலும், பதினேழு — பதினெட்டாம் நூற்ருண்டுகளில் அரசியல் புரட்சி எழுகின்றவரையிலும் உணரப்படாத எண்ணற்ற அரசியல் தத்துவங்கள் பதினுன்காம் நூற்ருண்டிலேயே வெளியிடப்பட்டன.

மார்சிக்ளியோ, அரசாங்கம், திருச்சபை இவைகளைப்பற்றிய அடிப்படைத் தத்துவங்களையும் அரசுக்குத் திருச்சபை உட்பட்டே இருக்கவேண்டுமென்பது பற்றியும் மிக விரிவான தனது தெளிவிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "அரசியல், சமூகத்தின் முதிர்ச்சி மக்களுக்கு நன்மை பயக்கிறது. சட்டத்தை இயற்றுபவர்கள்; குடிமக்களின் முழு வகுப்பு அல்லது அவர்களின் பெரும்பான்மையினராவர். அரசாங்க நிர்வாகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பொறுப்புக்குட்பட்டவர்கள் கையில் இருக்கிறது. சட்டங்களுக்குப் புறம்பாகவோ, அல்லது அவைகளை மீறியோ ஆட்சியாளர் நடந்தால், அவர்களை ஒழுங்குபடுத்தவும், அவர்கள் நெறிமுறை பிழைத்தால் அவர்களை ஆட்சிப்பீடத்தில் இருந்து இறக்கவும் மக்களுக்கு அதிகாரமுண்டு. திருச்சபையைப் பொறுத்தவரை தலையான அதிகாரம் அரசனுல் நியமிக்கப்பட்ட மதக்கவுன்சிலுக்கே உண்டு. மக்களின் பிரதிநிதிகளான மதச் சார்பற்ற அரசர்கள் மூலமாகவோ, அல்லது மதக் கவுன்சில்கள் மூலமாகவோதான் போப் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். போப் தவறு செய்தால், அதனைத் திருத்தவும், அவரைப் பதவியில் இருந்து நீக்கவும், அரசர்களுக்கோ அல்லது மதக் கவுன்சில்களுக்கோ அதிகாரம் உண்டு." இந்த அரிய கருத்துக்கள்தான், மார்சிக்ளியோ அரசியல் உலகுக்கு அளித்துச்சென்ற கருவூலங்கள்.

மார்சிக்ளியோ தனது ஆராய்ச்சி முடிவுகளை அரிஸ்டாடிலின் தத்துவங்களில் இருந்தே உருவாக்கினுர். அவர் தனது சமகாலத்துப் பிற அரசியல் ஞானிகளைப்போல் மதத் துறை வாசகங்களைத் தமது நூல்களில் ஆதாரமாகப் பயன்படுத்தவில்லை.

நாம் இயற்கையின் எழிலில் இன்பத்தையே காண்கிறோம்; உண்மையையே விரும்புகிறோம், இயற்கை உலகிலும், ஒழுக்க உலகிலும் நாம் அழகின் ஒருமையையே கண்டு இன்புறுகிறோம். இயற்கையின் எழிலைக் கண்டு இன்புறும்போது, நாம் கலையின் போக்கைச் சர்வ சுதந்திரமாக வெளியிட முடிகிறது.

செயலேருச் சேலத்து அலுமினியம்

சேலத்தில் நிறைந்த அளவில் மறைந்து கிடக்கும் அலுமினியம் எத்தன்மையானது? எவ்வெவ் வழிகளுக்குப் பயன்படுத்த வல்லது என்பதை ஆராய்ச்சியாளர்கள் பற்பல சமயங்களிலே, சந்தர்ப்பம் கிட்டிய நேரத்திலெல்லாம் எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றனர்—இன்றும் எடுத்துச்சொல்லி வருகின்றனர்.

பரந்து விரிந்து நிறைந்த அளவிலே தோண்டி எடுக்கப்படாமல் மண்ணுக்கடியிலேயே மங்கிக்கிடக்கின்ற சேலத்து அலுமினியத்தைப்பற்றியும், அறிஞர் பெருமக்களின் ஆராய்ச்சியின் முடிவுகளைப் பற்றியும், மத்திய அரசும், மாநில அரசும் மனத்திற்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை!

சேலத்திலே அதிக அளவிலே மண்ணுக்கடியில் மங்கித் தூங்கிக் கொண்டிருக்கும் அலுமினியத்தைத் தோண்டியெடுத்துத் தென்னகத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தி, ஆண்டுதோறும் பெருகி வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கடிக்க வேண்டுமென்று பலமுறை மாநில அரசிற்கும், மத்திய அரசிற்கும் அறிவித்திருக்கின்றோம்.

எனினும், நம் கோரிக்கையை நிறைவேற்ற மறுக்கிறது மத்திய அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்ற தன்மையிலே—எந்தத் திட்டமும் வடக்கே தான்; அதன்பின்... முடிந்தால்!... தெற்கே என்கின்ற தன்மையிலே, ஆண்டொன்றுக்கு **20,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக்கூடிய அலுமினியத் தொழிற்சாலையொன்றை 16 கோடி மூலதனத்தில் உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த ரிகாண்டில்** தொடங்குகின்றனர் என்ற செய்தியொன்று சில தினங்களுக்கு முன்புதான் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

தற்போதைய நிலையில் கிடைக்கின்ற அலுமினியம் 7,000 டன்கள் என்றும், ஆண்டுத் தேவையோ 20,000 டன்கள் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில் 40,000 டன்கள் வரை அலுமினியம் தேவைப்படுமென்றும் கூறப்படுகிறது!

இந்தக் கணக்கின்படி பார்க்கின்றபோது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில் 40,000 டன்கள் வரை அலுமினியம் தேவையாக இருக்குமெனில், தற்போதைய சூழ் நிலையிலும், ரிகாண்டில் தொடங்கப்படவிருக்கின்ற தொழிற்சாலை தொடங்கப்பட்டு, செயலாற்ற முனைந்தாலும், ஆண்டொன்றுக்குச் சுமார் 15,000 டன்களிலிருந்து 20,000 டன்கள் வரை அலுமியத்தின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிகிறது.

ஏ. கலைமுகிலன்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியிலே தேவைப்படுகின்ற அலுமினியத்தைப் பெறுவதற்காக ஆண்டொன்றுக்குச் சுமார் 10,000 டன் தயாரிக்கவல்ல இரு தொழிற்சாலைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டுமென்று அலுமினியம் பற்றி ஆராயும் குழு சிபாரிசு செய்துள்ளதென்றும் தெரிகிறது.

அலுமினிய ஆராய்ச்சிக் குழுவின் கருத்தை ஏற்றுக்கொண்டு, மீண்டும் இரு அலுமினியத் தொழிற்சாலைகளை எங்கு அமைக்கப் போகிறது, மத்திய அரசு என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அலுமினிய ஆராய்ச்சிக்குழுவின் கருத்திற்குச் செவிசாய்த்து, மேலும் இரு அலுமினியத்தொழிற்சாலைகளை மத்திய அரசு நிறுவுவதற்கு முன்னால், தென்னகத்தை—இன்பத் திராவிடத்தை கண்ணெதிரே கொண்டுவந்து, சேலத்தையும், சேலத்து அலுமினியத்தைப் பற்றியும் சிறிது நேரம் சிந்திக்க வேண்டுகிறோம்.

மத்திய அரசு சிந்தித்துச்செயல்பட முனைவதற்கு முன்னால், சென்னை மாநில அரசின் கவனத்திற்குச்சிலவற்றைஎடுத்துக்காட்டுகிறோம்; பிறகேனும் சேலத்து அலுமினியத்தைப்பற்றி மத்திய அரசிடம் முறையிட்டு-வற்புறுத்தி அலுமினியத் தொழிற்சாலையொன்றைத் தென்னகத்தில் தோற்றுவிக்க முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதற்காக.

தற்போது இந்தியாவிலேயே சுமார் 25 கோடி டன் அலுமினியத்தின் மூலப் பொருளான பாக்சைட் கிடைக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியாவில் மொத்தத்தில் ஏறத்தாழ 25 கோடி டன்கள்தான் அலுமினியத் தாது கிடைக்கிறதெனினும், **சேலத்தில் சேர்வராயன் மலைத் தொடர்களில் மட்டும் சுமார் 6½ மில்லியன் டன்கள் கிடைக்கின்றன** என்று ஆராய்ந்து அறிவித்துள்ளனர்.

இதுமட்டுமல்லாது, ஸ்வீடன் கோரண்டத்தைப் பயன்படுத்தியும், சீனிக்கலியைப் பயன்படுத்தி அமெரிக்கரவும், பழுப்பு நிலக் கரியின் எரித்தூளைப் பயன்படுத்தி

(11-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சம் சென்ற இடம்

—(தமிழவேள்)—

களவியலுக்குப்பின் கற்பியல் தொடங்குகிறது. அதாவது தலைவனும் தலைவியும் திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்துகின்றனர்.

தமிழர்களையும் தமிழையும் வேற்று நாட்டான் ஒருவன் இழித்துப் பேசியதாகக் கேட்டுத் தமிழ்ப் படை ஒன்று — தமிழர்தம் ஆற்றலை அந்த நாட்டானுக்குப் புலப்படுத்திவிட்டுவரப் புறப்பட்டது. தலைவனும் அந்தப் படையிலே சேர்ந்தான். "இரண்டு மூன்று திங்களில்—கார்காலம் வருமுன்னரே—எங்களுடைய படை வெற்றி மாலை சூடித் திரும்பிவிடும்'' என்று தலைவியிடம் கூறிவிட்டுப் படையிலே சேர்ந்து போர்க்களம் நோக்கிச் சென்றான் தலைவன். காதலை விடக் கடமைக்கே முதல் இடம் அளிக்கும் மரபினளான தலைவியும் மகிழ்ச்சியோடு அவனுக்கு விடைகொடுத்து "விரைவில் வாகைசூடிவருவீர்'' என வாழ்த்தி அனுப்பினாள்.

என்ன இருந்தாலும் பிரிவு என்பது துன்பம் தராமல் இருக்குமா? இரண்டு மூன்று திங்கள் அவளும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு இருந்தாள். மூன்று திங்கள் முடிந்து கார்காலமும் வந்துவிட்டது. ஆனால் கணவன் வரவில்லை. போரைப்பற்றிய முடிவும் தெரியவில்லை.

"எங்கு பார்த்தாலும் பசுமை தழைத்துக் கண்ணுக்கு இனிமை தருகிறது. முல்லைக் கொடிகளில் எல்லாம் மலர்கள் பூத்துச் சிரிக்கின்றன. அந்த மலர்மணம் ஊரெல்லாம் கமழ்கின்றது. இப்படிப்பட்ட காலத்தில் கணவன் உடன் இல்லையே! போர் என்ன ஆயிற்றோ? தமிழர்கள்தான் போரிலுங்கூட அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள். ஆனால் அந்த வேற்று நாட்டார் சூழ்ச்சியினால் தமிழ்ப் படையை வென்றுவிடுகிறார்களோ என்னவோ? நம்முடைய தலைவர் போர்க்களத்தில் எந்த நிலையில் இருக்கிறாரோ?'' என்றெல்லாம் எண்ணிக் கவலைப்படுகிறாள் அந்தத் தலைவி.

மாலைநேரம். வீட்டு வாயிலின் ஒருபுறத்தே கவலையே உருவாக அவள் நின்றுகொண்டிருக்கிறாள். உடல் வாடி மெலிந்திருக்கிறது. அவளுடைய நெஞ்சம் அவளிடத்திலே இல்லை. அவள் படுகின்ற துன்பத்தைப் பார்த்து — அவளுடைய நெஞ்சம்—மிகவும் இரங்கி "ஐயோ! இந்தப் பெண் என்ன நாளுக்கு நாள் இப்படி வாடிப் போகிறாளே! தலைவன் இருக்குமிடமாகிய போர்க்களத்தைத் தேடிச் சென்று, அவனிடத்திலே முறையிட்டு அவனை அழைத்துவரலாம்'' என்று பல நாட்களுக்கு முன்பே சென்றுவிட்டது. சென்ற அந்த நெஞ்சம் திரும்பவே இல்லை! அந்த நெஞ்சத்தைப்பற்றித்தான் அவள் நினைத்துக்கொண்டிருக்கிறாள்!

'நம்முடைய நெஞ்சம் தலைவரைக் கண்டு நம் துயரைப்பற்றிச் சொல்லியிருக்கும். 'இன்னும் இரண்டொரு நாட்களில் போர் முடிந்துவிடும், நான் வந்துவிடுகிறேன்'' என்று அவர் சொல்லியிருப்பார். 'இரண்டொரு நாட்கள் தானே! இங்கேயே இருந்து தலைவரைக் கையோடு அழைத்துக் கொண்டு போவோம்' என்று நம்முடைய நெஞ்சம் அங்கேயே தங்கியிருக்கிறதோ! அல்லது ஒருகால் அவர் சொல்லியனுப்பிய செய்தியை நம்மிடம் சொல்வதற்காகத் திரும்பிவந்து நம்மைப் பார்க்க, நாம் முன்பைக்காட்டிலும் மெலிந்து வாடிப்போயிருப்பதால் 'இவள் நம்முடைய தலைவி அல்ல. வேறு யாரோ ஒரு பெண்' என்று மீண்டும் அவர் இருக்குமிடமே திரும்பிச் சென்றுவிட்டதோ'— என்று எண்ணியவாறு அசைவற்று நின்று கொண்டிருக்கிறாள்.

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்கள் பெறூஉம் கவின்பெறு காலை
எல்வளை நெகிழ்த்தோர்க்(கு)
அல்லல் உறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்
ஒருங்குவரல் நசையொடு
வருந்துங் கொல்லோ!
அருளானாதலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்த என்
பொன்னிற நோக்கி
ஏதிலாட்டி இவள் எனப்
போயின்று கொல்லோ நோய்தலை
மணந்தே!"

—நற்றிணை 56

தலைவியினுடைய நெஞ்சம் அவளைவிட்டுப் பிரிந்து தலைவனிடம் சென்றுவிட, அவள் ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்த அதே மாலைக்காலத்தில் தலைவன் எங்கே இருக்கிறான்? அவன் நெஞ்சம் எங்கே இருக்கிறது?

போரில் வெற்றி பெற்று அவன் திரும்பிக்கொண்டிருக்கிறான். தேரிலேதான் வருகிறான். குதிரைகளோ காற்று வேகத்தில் வந்து கொண்டிருக்கின்றன, ஞாயிறு மேற்கே கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருக்கிறது. ஆனால் அவனுடைய ஊரோவந்து சேரவில்லை. நெடுந்தூரத்திலிருந்து வருகிறான். எப்படியும் பொழுது விடியுமுன்னே வீட்டை அடைந்து விடலாம் என்று வருகிறான்.

அவனுடைய நெஞ்சமோ அவனை விட்டுவிட்டு விரைந்து வீட்டுக்கே சென்றுவிட்டது, வெளியில் மேய்வதற்காகச் சென்றிருந்த மாடுகளும் கன்றுகளும் வீடு திரும்பிக்கொண்டிருக்கின்ற அந்த மாலை வேளையில், மனைவி வீட்டின் ஒருபுறத்தே நின்றுகொண்டிருக்கிறாள். ஒரு பல்லியின் குரல் கேட்டு "கணவன் விரைவில் வந்துவிடுவான் என்று சொல்கிறாயா? பல்லியே நீ வாழ்க!'' என வாழ்த்திக் கொண்டிருக்கிறாள். வீட்டினுள் நுழைந்த தலைவனுடைய நெஞ்சம் தலைவியைப் பார்க்கிறது. அவள் த[illegible] வாரிப் பூச்சூ[illegible] இருக்கவில்லை

அணிகலன்களை அணிந்திருக்கவில்லை. கைகளிலே வளையல்கூட இல்லை. இருந்தாலும் புனையா ஓவியம்போல் என்ன அழகாக இருக்கிறாள்! என்று அந்த நெஞ்சம் அவள் பின்புறமாகச் செல்கிறது. கைகளைக் குவித்துக்கொண்டே சென்று அவள் இரு கண்களையும் மூடுகிறது. "என்னடி தோழி! விளையாடுகிறாய்?'' என்று திரும்பிப் பார்க்கிறாள் அவள்!

அங்கே அவள் தன் தோழியைக் காணவில்லை. கணவனையே காண்கிறாள். அப்படியே கணவன் மீது சாய்கிறாள். அந்த நெஞ்சம் இந்நேரம் அவளுடைய கண்களைப் புதைத்து விளையாடிய நெஞ்சம்— அவளை அணைத்துக் கொள்கிறது. அணைத்துக் கொண்டு அவளுடைய கூந்தலை நீவுகிறது. கைகளெல்லாம் இவ்வளவு மெலிந்து விட்டனவே என்று அவள் கைகளைத் தடவிக் கொடுக்கிறது. அவள் நெற்றியைப் பார்க்கிறது. அதிலேதான் என்ன அழகு! அவள் வாய் திறந்து இனிய குரலிலே மொழிக்கு மொழி தித்திக்கப் பேசமாட்டாளா? என எதிர் பார்க்கிறது அந்தத் தலைவனின் காதல் நெஞ்சம்!

"...................................

ஞாயிறு படினும் ஊர்/சேய்த்(து) என்றுது
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும் விரைந்து வல்எய்திப் பன்மாண்
ஓங்கிய நல் இல் ஒருசிறை நிலை இப்
பாங்கர்க் கல்லி படு தொறும் பரவிக்
கன்று புகுமாலை நின்றோள் எய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக்
குறுகிப்
பிடிக்கை அன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரப் தோய்ந்தன்று
கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீக் கிளிவிக் குறுமகள்
மென்றோள் பெறல் நசைஇச் சென்ற என்
நெஞ்சே!''

— அகம், 9.

நேரான வாழ்க்கை நடத்துபவர்களும் மன அமைதி உள்ளவர்களும் வயோதிகத்தால் பாதிக்கப்படுவதில்லை: தீய பண்பு உள்ளவர்கள் தாம் யௌவனத்திலும் வயோதிகத்திலும் துன்புறுகிறார்கள்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

ருஷ்யாவும் அலுமினியம் தயாரித்து வருகின்றன.

எனவே, அலுமினியத்தைத் தயாரிக்கப் பாக்சைட்தான் தேவை என்ற நிலை மாறி, கோரண்டம், சீனிக்களி, பழுப்பு நிலக்கரியின் எரித்தூள் ஆகியவை இருந்தால் கூட அலுமினியத்தை ஆக்க முடியுமென்ற நம்பிக்கைக்கு இடமேற்படுகிறது.

எனவே, திராவிடப் பகுதிகளான சித்தூர், அனந்தப்பூர், தென் கன்னடம், கோவை, திருச்சி மாவட்டங்களில் கோரண்டம் நிறையக்கிடைக்குமென்றும், தென்னாற்காடு, கிழக்கு மேற்குக் கோதாவரிகள், தென் கன்னடம், மலபார், நெல்லூர் நீலகிரி, தஞ்சைபோன்ற மாவட்டங்களில் பழுப்பு நிலக்கரி நிறைந்த அளவிலுண்டு என்றும், குறிப்பாக நெய்வேலி போன்ற இடங்களில் சீனிக்களியும் கிடைக்கின்றது எனவும் தெரிகிறது.

சேலத்தில் சேர்வராயன் மலைத் தொடர்களிலும், மற்ற மற்றப்பகுதிகளிலும் கிடைக்கின்ற அலுமினியத் தாதுவான பாக்சைட்டைக் கொண்டும், திராவிடத்தின் பல பகுதிகளிலும், குறிப்பாகத்தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவிக் கிடக்கின்ற கோரண்டம், பழுப்பு நிலக்கரி எரித்தூள், சீனிக்களி முதலிய பொருள்களைக் கொண்டும் பல அலுமினியத் தொழிற்சாலைகளை இன்பத் திராவிடத்தில் — இத்தமிழகத்தில் நிறுவ முடியுமென்றும் திட்டவட்டமாகக் கூறலாம்.

தென்னகத்தே— திராவிடத்தே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு அலுமினியத்தை உருவாக்க, தென்னகத்தில் அலுமினியத் தொழிற்சாலை உருவாக்கப்படுமேயானால், நம் தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பது திண்ணம்.

நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக, அண்டை நாடுகளான கனடா, பிரிட்டன், அமெரிக்கா, நார்வே போன்றவற்றிடமிருந்து ஆண்டொன்றுக்கு 603 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 19,286 டன் அலுமினியத்தை எதிர்நோக்கி வாழவேண்டிய நிலை ஏற்படாது!

எனவே, தொழில் வளத்தைப் பெருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைத் துரத்தி, வறுமையை விரட்டி வாழவேண்டுமானால், தென்னகத்தில் பல சிறு சிறு அலுமினியத் தொழிற்சாலைகளைத் தோற்றுவிக்கவேண்டும்.

தென்னகத்தில் அலுமினியத் தொழிற்சாலை தோற்றுவிக்கப்படுமேயானால், வேற்று நாடுகளிடையே இருந்து அலுமினியத் தாதுவை இறக்குமதி செய்யப்படுகின்ற நிலைமாறி, நாம் ஏற்றுமதி செய்கின்ற நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமடைவதற்கில்லை.

நம்பிக்கையில்லா ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற, ஆண்டொன்றுக்கு 10,000 டன்களை உற்பத்தி செய்யக்கூடிய அலுமினியத் தொழிற்சாலை இரண்டைத் தொடங்கவேண்டுமென்ற, அலுமினிய ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு, செயலேனுச் சேலத்துச் சேர்வராயன் மலைத்தொடர் அலுமினியத்தையும், திராவிடத்தின் — தமிழகத்தின் மற்ற மற்றப் பகுதிகளில் பரவிக் கிடக்கும் கனிவளத்தையும் பயன்படுத்தித் தென்னகத்தே அடுத்த இரு அலுமினியத் தொழிற்சாலைகளையும் தோற்றுவிக்குமா, மத்திய அரசு?

தென்னகத்தைத் தொழில்வள நாடாக மாற்ற மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

கோர தாண்டவம் புரிகின்ற வறுமையும், நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியும் ஆளை வாட்டி வதைக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும் தீருமா?

திராவிடம் தென்றல் தவழ் சோலையாய் மாறுமா? அன்றி, தீய்க்கும் பாலையாகவே மீண்டும் மீண்டும் மாற்றப்பட்டு, ஒன்றுமேயில்லாமலாக்கப்பட்டே தீருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

★

யாருக்கு ஈமச்சடங்கு?

அன்பு

“பார், பார்! பாண்டிச்சேரியைப் பார்!” என்றனர் சில நாட்களுக்கு முன் இந்த நாட்டை ஆளும் காங்கிரஸ்காரர். சில பத்திரிகைகளும் அவர்களைப்பின்பற்றிப் பேனாமுனையில் எழுதிக்காட்டின. அகில உலகச் செய்திகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் “இந்து”ப் பத்திரிகைகூட ஒரு தலையங்கமே எழுதிற்று ‘பாண்டிச்சேரி’ என்ற தலைப்பில். தி. மு. க. தலையிட்ட எந்த ஒரு நல்ல காரியத்துக்கும், அதைப்பற்றியும் அதன் முக்கிய கொள்கைகளைப்பற்றியும் அறிமுகப்படுத்தி எழுதாத ‘இந்து’’ ‘பாண்டிச் சேரியில் தி. மு. க. ஒரு இடத்தைக்கூடப்பிடிக்கவில்லை என்பது முக்கியமானது’ என்று எழுதியதோடல்லாமல், தி. மு. க. என்றால் என்ன. அது எந்த முக்கிய கொள்கைகளைக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் சுருங்கக்கூறி விளங்கவைத்திருந்தது.

தி. மு. க--வைப்பற்றி அறிந்த பொதுமக்கள் ‘இது என்ன பாண்டிச் சேரியைப் பார்க்கச் சொல்கிறார்களே’ என்று பாண்டிச்சேரியைப் பார்த்தனர். இதுவரை தி. மு. க. என்ற தூய மூன்றெழுத்துக்கள் படாத பாண்டிவட்டம் முழுமையும் தேர்தலுக்குப்பின் இருவண்ணக்கொடிகள் வானளாவிப் பறந்துகொண்டிருந்ததைத்தான் காண்கின்றனர். இதுவரை இருகட்சிகளுக்கு மட்டுமே ஏகபோக உரிமையாயிருந்த பாண்டி நிலத்தில் தி. மு. க. இறங்கித் தரிசைத்திருத்திக்காட்டுமுட்செடிகளை அகற்றிக் குழிபறித்து நீர்பாய்ச்சி விதைமட்டுமே தூவி வந்திருக்கிறது. இதைத்தான் காங்கிரஸ்காரர் மரமே பட்டுவிட்டது என்கிறார்கள்.

இதை இன்னும் கீழான சொற்களைக் கருத்திலும் கரத்திலும் ஏந்திப் பேசியும் எழுதியும் வருகிறார்கள் — ‘தி. மு. க-வுக்கு கருமாதி’ என்று. சாகப்போகும் கிழவன் சொல்லுகிறான் தத்தி நடை பழகும் குழந்தையைப் பார்த்து — ‘அதோபார் அதுவும் என்னோடு கீழேவிழுந்து சாகப் போகிறது’ என்று. அது கீழே விழுந்து விழுந்து நடைபயில்வது பின்னர் சக்தியோடு நடப்பதற்குத்தான். வளர்ச்சி என்பது அது போலத்தான் அமையும் என்பதை அறியாத அந்தக் கிழவனைப்போல, காங்சுரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள் ‘தி. மு. க-வுக்குக் கருமாதி’ என்று. எந்த நிலையில் இருந்துகொண்டு சொல்லுகிறார்கள் தெரியுமா? சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும், சேலத்திலும் நடந்த கருமாதிகள் அனைத்தையும் அதற்குள் மறந்துவிட்ட நிலையில்! தி. மு. க. இருந்ததை இழந்ததா? அல்லது, இத்தனை நகரங்களிலும் காங்கிரஸ் இருந்ததை இழந்ததா?

இந்தநிலை இராசாராம்(நாயுடு) வின காங்கிரசுக்கு மட்டும் இல்லை. திருமதி இந்திராகாந்தியின் மேற்பார்வையின்கீழ் இயங்கும் அகில இந்திய காங்கிரசுக்கே இந்த நிலைதான்.

காங்கிரஸ் சரிகிறது என்ற உண்மையைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் வேண்டுமானால் உணர மறுக்கலாம். ஆனால் ‘பெரும்புள்ளிகள்’ உணர்ந்துகொண்டுதான் வருகின்றனர். சில கிழமைகளுக்கு முன்பு பம்பாய் பத்திரிகை பிளிட்ஸ் எழுதியது.

“இந்தியாவில் இப்போது மக்கள் அரசாங்கத்தின்பால் கொண்டிருக்கும் நம்பிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இன்று நமது அரசாங்கம் என்ற உணர்வு பெரும்பான்மை மக்களிடையே இல்லை.”

ஆனால் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரரகள் மட்டும் ஓயாமல் இன்னும் காங்கிரஸ் வளர்கிறது என்றுதான பேசி வருகின்றனர். உடல் வீக்கம் இருவகை நிலையில் ஏற்படும். உடல் பலத்தினாலும் ஏற்படும், பலக் குறைவினாலும் உடல் ஊதி வீக்கம் ஏற்படும். இதுகடைசி நிலையைக் காட்டும் அறிகுறிதான். இப்போது காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கும் வீக்கம் வெளி வீக்கம். உள்பலக் குறைவு மிகவும் காங்கிரசைப் பாதித்திருக்கிறது. (Indian Institute of Public Opinion)

I. I. P. O என்ற நிறுவனம் காங்கிரசின் பலம் மக்கள் சபையில் எவ்வாறு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது என்பதைத் தனது இரகசிய மாதஅறிக்கையில் வெளியிட்டிருக்கிறது. அதைப் பம்பாய் ஏடு “கரண்ட்” சென்ற கிழமை இதழ்அப்படியே பிரசுரித்துள்ளது மாநிலங்கள் வாரியாக. இதைத் தமிழ்நாடு காங்கிரஸ் பிரசாரபீரங்கிகளின் மேலான சிந்தனைக்கு வைக்கிறோம். இதைக் கண்ணுற்ற பிறகாவது அகில இந்திய ஈமச் சடங்கு எங்கு நடக்கிறது என்பதை உணர்வார்களாக:

மக்கள் சபை

காங்கிரஸ் பலம்

மாநிலங்கள்:	1959 ஏப்ரல்-மே:	1957 தேர்தல்
ஆந்திரம்	49·6%	51·2%
வங்காளம்	35·6%	50·7%
பிகார்	43·0%	45·8%
பம்பாய்	43·6%	48·6%
டெல்லி	40·8%	53·7%
கேரளம்	36·0%	35·1%
மத்தியப்பிரதேசம்	53·6%	52·1%
சென்னை	45·5%	47·8%
மைசூர்	47·0%	55·4%
ஒரிசா	41·5%	46·9%
பஞ்சாப்	38·1%	50·9%
ராஜஸ்தான்	52·0%	53·6%
உத்தரப்பிரதேசம்	44·8%	46·4%
அகில இந்தியா	43·7%	48·3%

Current 23—9—59.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரம், ஈமச் சடங்கு அல்லது கருமாதி யாருக்கு என்பதை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் எடுத்துக் காட்டுகின்றது. இதனை—இந்தப் பேருண்மையை உணர முடியாத அப்பாவி ஐயோ பாவங்கள் பாண்டிச்சேரியில் தி. மு. க. வுக்குக் கருமாதி என்று கரைகின்றன.

பாலையா--சோலையா?

அறுந்துபட்ட வீணை!
எறிந்துவிட்ட குப்பை!
சிந்திவிட்ட பால்!
சுவையில்லாப் பண்டம்!
காட்டில் காயும் நிலவு!
மணமில்லா மலர்த் தோட்டம்!
விழிகளில்லா வதனம்!
அழிந்துபட்ட பூஞ்செடி!
மழலையில்லா மதலை!
அழகில்லா ஓவியம்!

இப்படியெல்லாம் என்னைப்பற்றிய சித்திரம் தீட்டப்பட்டது-நாட்டிலே நானுவித நல்லவர் உட்படப் பலபேர்களால்!

அழகு கூடாது!
அலங்காரம் ஆகாது!
குங்குமமா—செச்சே!
மஞ்சளா—மாசாயிற்றே!

அணிமணிகளா — குணக்கேடல்லவா அவைகளை அணிந்து கொள்வது? குலாச்சாரம் என்ன ஆவது?

நாகரிக வாழ்வா? — நல்லதல்ல அது, நம் குடும்ப கௌரவத்துக்கு.

தேன் மணக்கும் பூக்களைச் சூடிக்கொள்ளலாமா?— வழி வழி வந்த ஒழுக்கம் என்ன ஆவது? அதைவிட அழிந்துவிடுவதே நல்லது. பின்?—இப்படி வினு எழுப்பினுல், விடைகள் வற்ருத ஊற்றுப் போல் வந்தன. கூறட்டுமா அவைகளை?

மூலையில் முடங்கிக்கிடக்க வேண்டும்.

கலையில்லாக் காரிருளில் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்க வேண்டும். நலிந்துவிட்ட வாழ்வை நினைத்துக்கொண்டு மெலிந்து சாக வேண்டும்.

தலைவாரிப் பூச்சூடக் கூடாது.

அணிமணிகள், அலங்காரம்—விரும்புதல் கூடாது.

பட்டுப் புடவை போன்ற பகட்டான உடைகளை உடுத்தக் கூடாது.

ஆடம்பரத்தையும் அழகையும் அத்தனை வசதிகளும் வாய்ப்புகளும் இருப்பினும் ஒதுக்கித் தள்ளி வெறுக்கவேண்டும்.

இயற்கை ஈந்துஉவப்பிக்கும் பருவக் கொழுமையை அழித்துவிடல் வேண்டும்.

பொழுதுபோக்கு, உல்லாசவசதிகள், உற்சாகம் அளிக்கும் வாய்ப்புக்கள்—இவை அறவே கூடாது.

இப்படித்தான் என் உறவினர் உற்ருர் மற்ருேர் அனைவரும் துணிவுடன் மட்டுமல்ல, கடைபிடித்தே யாகவேண்டும் என்று கட்டாயப் படுத்தினர்.

மதியொளி

உள்ளம், குமுறும் எரிமலையா—கொந்தளிக்கும் கடலா என மாறி நின்றது.

வயிறு நிறையப் பசி! எதிரே சுவையுடைப் பலகாரங்கள். ஆனுலும் நான் உண்ணக்கூடாது என்ற உத்தரவு!

அழகுமிழும் எழில் சித்திரக் கூடம்! ஆனுலும் அவற்றைக் கண்டு களிக்கக் கூடாது என்று கண்களைக் கட்டிவிட்ட நிலை—எனக்கு.

உள்ளத்தில் ஊற்றுகச் சுரந்து வரும் கவிதைகள்! ஆனுலும் ஏட்டிலே எழுதி எடுத்துக் காட்டக் கூடாது என்று கைகளைக் கட்டிவிட்ட நிலை—எனக்கு.

இன்ப நாதம் எழுப்பிடும் வீணை எதிரே! மீட்டிவிடும் கலையும் தெரிந்த எனக்கு, மீட்டிவிடல் கூடாது என்ற மிரட்டல்.

கூட்டிலடைபட்ட கிளி! காட்டிலகப்பட்ட சிறுவன்! இவர்கள் நிலையிலிருந்தேன், என்ருலும் இவைகளையும் பொறுத்துக் கொள்ளத் தயாராக்கிக்கொண்டேன் என்னை. ஆனுல் அடுத்தடுத்து வந்துற்ற கட்டளைகளும், அவமானங்களும் என்னை வாழச் செய்யாமல் கொல்லாமல் கொன்றன.

வெளிஊருக்கோ மற்றெந்தக்காரியத்துக்கோ யாராவது வெளியே சென்ருல், அவர்கள் எதிரே நான் செல்வதுகூடாதாம்! அதனுல் எண்ணிப் புறப்பட்ட காரியம் கைகூடாதாம்! அந்தக் கையாலாகாதவர்களுக்காக, ஊரும் பேரும் தெரியாத உறவொன்றுமில்லாத யார் யாருக்கோ நான் எதிரில் செல்லாமல், அவர்கள் காரியத்துக்கும் வேலைக்கும் துணைசெய்ய வேண்டுமாம்! ஏன்—உற்ருர் உறவினர்கூட அமங்கலம் அமங்கலம் — ஆகாது காரியம் — கெட்டுவிட்டது புறப்பட்ட வேலை — செச்சே — தாலியறுத்ததுகளை ஏன்தான் ஆண்டவன் விட்டுவைத்திருக்கின்ருனே என்ற இழிவும் பழியும் கொண்டு ஏசிடும் சுடுசொற்களைச் செவியேற்றுப் பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலையையும் தாங்கவேண்டியதாயிற்று எனக்கு.

சித்திரவதை என்று சொல்வார்களே, அந்த வதையில் தினம் தினம் தேய்ந்துகொண்டிருந்தேன். வேதனையில் என் இதயம் கருகிக்கொண்டிருந்தது. அனலிடைப் பட்டபுழுப்போலச் செத்துக்கொண்டிருந்தேன். மரணத்தில் மீளாத சுகத்தைக் கண்டிடலாம் என்ற ஆசை இருந்தாலும், அவர் அளித்துவிட்டுச் சென்ற செல்வம்—அவரின் நிழலோவியம்—என் கண்மணி எழில்வாணியை எப்படி விட்டுவிட்டு நான் மட்டும் இறக்க முடியும்?

பதினெட்டு வயதிலேயே இப்படிப்பட்ட பாழ்பட்ட நிலையை எய்திவிடுவேன் என்று கனவில்கூட நான் எண்ணியது கிடையாது. சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிட்ட நான், மணிச்செல்வியாய்—மரகதமணியாய் —மாணிக்க ஒளிவிளக்காய் என் தாய்க்கு எழிலோவியமாய்-ஒரே மகளாக வளர்ந்தேன். தந்தை விட்டுச்சென்ற இலட்சம் பணத்திலே செல்வமாய் வளர்ந்துவிட்ட எனக்கு, துயரும் துக்கமும், கவலையும் கண்ணீரும் என்னவென்றே தெரியாது. துன்பத்தின் நினைவே இல்லாமல் வளர்த்துவிட்ட என் அன்னையும், நான் அடைந்துவிட்ட இந்நிலையைக் கண்டு இதய வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லையோ என்னவோ, என்னைக் கைப்பிடித்தவர் இறந்துவிட்ட பதினைந்தாம் நாள், என்னைப் பிரித்து இறந்துபட்டார்கள். பரந்து விரிந்த இந்நிலவுலகில் நான்தான் என் மகள் எழில்வாணிக்குத் துணை! எழில்வாணி எனக்குத் துணை!

எழில்வாணியின் கொள்ளையழகு என் உள்ளத்திற்கு வளத்தைச் சேர்த்தது. குமுதவாய் திறந்து அமுதமொழிகளால் ‘அம்மா’ என்றழைக்கும்போது,இவ்வின்பத்தை அநுபவிக்க அவரும் இல்லாமல் போய்விட்டாரே என்று எண்ணிக் கலங்குவேன். ஓராண்டுச் செல்வி என் எழில்வாணி என் முகத்தைத் தன் நெஞ்சையள்ளும் பிஞ்சுக் கரங்களால் — மலர் விரல்களால், தன்னெதிரே திருப்ப முயற்சிப்பாள். இதயம் தாங்கொணாத் தவிப்பினால் விம்மி வேதனையுறும். அவளின் அழகும், பொருளறிய முடியாத அமுத இலக்கியப் பேச்சும் என்னை என் துன்பத்தினின்றும் காப்பாற்றி வந்தன என்று கூறலாம்.

எழில்வாணிக்கு நான்கு வயதாகும் போதுதான் என் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. நெஞ்சு நிறைய ஆசையிருந்தும், வஞ்சகர்கள் ஏற்படுத்திவைத்த சட்டதிட்டங்களுக்காக அடக்கிவைத்திருந்தேன அத்தனை ஆசைகளையும்; என்றாலும், எனது இருபத்திரெண்டு வயதில் ஏற்பட்ட திருப்பத்தை மகிழ்வுடன் வரவேற்காமலிருக்க முடியவில்லை.

என் கணவர் இறப்புக்குப் பின், தாயும் இறந்துவிடவே, உலகில் உற்றதுணையின்றித் தனியானேன். நானும் எழில்வாணியும் இருவர் மட்டுமே மிகப்பெரிய எங்கள் மாடி வீட்டில் தனியே இருப்பது மனதுக்கு என்னவோ செய்ததால், குடித்தனம் ஒன்றுவைத்தேன்.

பக்தியும் படிப்பும் கொண்ட அக்குடும்பத்தில் இருந்தவர் நாலே பேர். அவர்களில் அந்த அம்மை—வயதானவர்கள்தான். ஒருபிள்ளை-அவர் சென்னையில் கல்லூரி ஒன்றில் பி. ஏ. படிப்பதாகச் சொன்னார்கள். மகள் ஒருத்தி இருந்தாள். உயர்தரப்பள்ளியில் பத்தாவது படித்துக்கொண்டிருந்தாள். சாந்தா என்னும் பெயருக்கேற்ப அமைதியான களைபொருந்திய முகமும், அழகுபூத்த முல்லைநகையும், அடக்கமான நடத்தையும் பூண்டிருந்த சாந்தா, அன்புடன் ‘அண்ணி’ என அழைக்கத்தொடங்கினாள். ‘அக்கா’ என அழைத்தால் போதும் என்று கூறியும், குறுநகையுடன் அதை மறுத்துவிட்டாள். பின்னால் தான் தெரிந்துகொண்டேன்—அவள் அண்ணன் அவ்வாறு என்னை அழைக்கும்படி அவளுக்குக் கூறியிருந்தாராம்.

சாந்தா தன் அண்ணனைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்வதைக் கேட்டால், நாள் முழுவதும் கேட்டுக்கொண்டேயிருக்கலாம் எனத் தோன்றும். அவள் கூறியிருந்த பண்புகள் பொய்யல்ல என்பதைப் பின்னால், அவர் பி. ஏ. தேறிவிட்டு இல்லிற்குத் திரும்பி, என் மனதைக் கவர்ந்து கொண்டாரே, அப்போது உணர்ந்து கொண்டேன்.

அழகிய அவர் முகம் என் நெஞ்சில் இன்ப அலைகளை எழுப்பியது. அவரது இன்ப மழை பொழிந்திடும் கனிப்பேச்சுக்கள் என் இதய தாபத்துக்கு ஆறுதலளித்தன. அஞ்சாது வெளிவரும் வளமான கருத்துக்கள், அவரது கூர்மையான அறிவை வெளிப்படுத்தின. தனது இலட்சியக் கொள்கைகளையும், நாட்டிலுள்ள கட்சிகளின் நடைமுறைகளையும், சமுதாயத்தின் சீர்கேடுகளையும், தமிழகத்தின் பெருமையையும், தமிழ் மொழியின் உன்னதத்தையும் அழகிய தமிழிலே எடுத்துச் சாந்தாவுக்கு விளக்கும்போது. நான் கேட்டுக்கொண்டிருப்பேன் மறைவாக. சாந்தா அத்தனை கருத்துக்களையும் கேட்டுவிட்டு, என்னிடம் அரும்புநகை காட்டிக்கொண்டு வருவாள். கண்களில் குறும்புடனே, அனைத்தையும் என்னிடம் கூறுவாள். அவ்வளவும் கேட்டுவிட்டு ஒரு பெருமூச்சுடன் எழுந்து நடப்பேன். வியப்பு மேலிட என்னை நோக்கிவிட்டு, சாந்தா சென்றுவிடுவாள்.

சில நாட்களிலேயே என் எழில்வாணி அவரிடம் ஒட்டிக்கொண்டாள். அவரிடம் சென்றாலொழிய அழுகையை நிறுத்தமாட்டாள் என்ற நிலைக்கு அவள் அவரிடம் ஒட்டிக்கொண்டிருந்தாள். வாஞ்சையுடன் எடுத்தணைத்து எழில்வாணியுடன் கொஞ்சும்போது குறும்பெல்லாம் பேசுவார் அக்குழந்தையிடம். என்னைப்பற்றியெல்லாம் சிறு குழந்தையிடம் விசாரிப்பதுபோல அவர் வினாக்களைத் தொடுப்பார். சாந்தா அவ்வினாக்களுக்கெல்லாம் தக்க விடையிறுப்பாள். அமைதியடைந்துகொண்டுவந்த என் மனத்தில் அலைகளை எழுப்பிவிட்டன இத்தகு நிகழ்ச்சிகள்.

சிறந்த நாவல்கள் கட்டுரைகள் படிப்பார். சாந்தா சில நாவல்களை என்னிடம் கொடுப்பாள் படிப்பதற்காக. அதிலே சில வாக்கியங்கள் கோடிடப்பட்டிருக்கும். அவை சாந்தாவின் அண்ணாவால் முக்கியமென்று கோடிடப்பட்டவையாம். நாவல்கள் அவருடையனவே என்பதைத் தெரிந்துகொண்ட நான், என் மனத்திற்கு முக்கியம் எனத் தோன்றியவைகளைக்கோடிட்டேன். அவர் கோடிட்ட வாக்கியங்கள் தான், என்ன, அழகான கருத்துக்களைக் கொண்டவை. அறிவின் ஆழத்தால் அல்லவோ, அவருக்கு இத்தகு வாக்கியங்கள் வண்ணச் சுவையாக விளங்குகின்றன. மாசில்லாத அவர் மனத்தில் இவ்வாக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் பதிந்துவிட்டிருக்கும் அல்லவா? — என்றெல்லாம் எண்ணுவேன். நான் கோடிட்டவைகளை ‘யார்?’ என அவர் கேட்டாராம். நான் என்று சாந்தா கூறிடவே, என் அறிவின் திறத்தை மெத்தப் புகழ்ந்து கூறினாராம். என்னுடன் பேச விழைவதாகக்கூட விரும்பினாராம்;—இப்படியெல்லாம் சாந்தா என்னிடம் கூறினாள்.

அன்று எழில்வாணி சுவரில் மாட்டியிருந்த நிலைக்கண்ணாடி வேண்டுமெனப் பிடிவாதம் பிடித்து அழுதுகொண்டிருந்தாள். நானும் அவள் கவர்ச்சியை எப்படியெல்

லாமோ வேறு திசையில் திருப்பி விடப் பார்த்தேன். விடாமல் பிடிவாதம் பிடித்தது, என் பொறுமையைப் போக்கடித்துவிட்டது. நன்றாக அடித்துவிட்டேன். விம்மலும் தேம்பலும் பெருகி, மேலும், கண்ணாடி வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தாள். ஆகவே மிக்க சினம் கொண்டு அடித்து அடக்கலானேன். திடீரென்று அவர் வந்தார். என் கரத்தைத் துணிச்சலாகப் பிடித்து, என்னைச் சினத்தோடு ஒரு முறை பார்த்தார். அந்தப் பார்வையில் தான்......... நான் சிறிது நடுங்கித் தூர விலகினேன். அவர் எழில்வாணியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்—மாடிக்கு. நான் அவர் துணிவிற்கு வியப்பதா? வெறுப்பதா? எழில்வாணிமீது கொண்ட பாசத்துக்கு விரும்புவதா?—என்று எண்ணிக்கொண்டே உட்கார்ந்துவிட்டேன்.

காலையில் அவருடன் சென்ற குழந்தை, மாலையாகியும் என்னிடம் வராமலிருந்தாள். இரவும் ஆகியது. அன்று முழுவதும் குழந்தையில்லாமல், உண்ணவும் முடியவில்லை. சாந்தாவிடம் கேட்டதற்கு, மாடியில் தன் அண்ணாவிடமிருப்பதாகக் கூறினாள். எனவே நானும் பாராமுகமாக இருந்துவிட்டேன். இரவாகியும் வரவில்லையே என்பதால், எங்கே என்று சாந்தாவைக் கேட்டேன். சினிமாவிற்கு அவள் அண்ணா அழைத்துக்கொண்டு சென்றிருப்பதாகச் சாந்தா கூறினாள்.

சினிமா எப்போது விடுவார்கள் என்றாகிவிட்டது எனக்கு. அவர்கள் வீட்டில் அனைவரும் உறங்கிவிட்டனர். தெருக்கதவை நான் திறந்து வைத்துவிட்டு, உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவர் வந்தார். எழுந்து நின்றேன். அருகில் வந்து, எழில்வாணியை என்னிடம் தந்தார். சிறிது நேரம் அமைதியாக நின்றுகொண்டிருந்த அவர் பேச ஆரம்பித்தார். "ஏன், எப்போதும் முகத்திலே கவலையைத் தேக்கி வைத்துக்கொண்டு, கலையிழந்து காணப்படுகின்றாய்? துன்பத்தை எதிர்த்துப் போராடுவதே வாழ்வினுக்கு அழகு. துவண்டு விடுகின்றாயே. நீ கோடிட்டுவைத்த வாக்கியங்களைப் படிக்கும்போது, என் மனதில் உன்னைப்பற்றிய எழில் நினைவுகள் எழ ஆரம்பித்துவிட்டன. தித்திக்கும் அக்கருத்துக்களை விரும்பும் நீ மட்டும் என்னை ஏற்றுக்கொண்டால்......" என்றெல்லாம் சொல்லிக்கொண்டே சென்றார். என் மனம் மிகவும் நெகிழ்ந்திருந்தது. நான் அழ ஆரம்பித்துவிட்டேன். என் பலவீனம் எனக்குத் தெரிந்திருந்தது. ஏனோ, அந்தப் பலவீனத்துக்கு அந்த நேரத்தில் தடையிட்டு, வலிமையூட்ட முடியவில்லை. என் விம்முதலைக் கேட்ட அவர், என் முகத்தைத் தொட்டு நிமிர்த்தினார். அந்த நேரத்தில் அவர் நிமிர்த்தி நின்ற நோக்கும், நிமிர்த்திய அவரது அன்பும், மென்மையான கரத்தின் பிடிப்பும் எனக்கு இதமாக இருந்தது. எனவே நான் தடை ஒன்றும் கூறவில்லை. "அழுவதில் கோழைத்தனம்தான் வெளிப்படும். வாழ்வதற்கு நீ நல்லவளாக மட்டும் இருந்தால் போதாது. துணிந்த மனது வேண்டும். என்னைப்பற்றித் தவறாக நினைக்கவேண்டாம். உன் உத்தரவின்றி உள்ளத்திற்கு மாறாக எந்தவித தவறான செயலுக்கும் என்னை நான் உட்படுத்திக்கொள்ளமாட்டேன். சிந்தனைசெய். மனம் வளர நல்ல நூல்களை நாடு, பத்திரிகைகளைப் படி. நாங்கள் இந்த வாரத்தின் இறுதி நாள் தாஜ்மகாலைப் பார்க்கப்போகின்றோம். நீயும் எங்களுடன் வர வேண்டும் என்பது எனது விருப்பம். எழில்வாணியை அடிக்காதே. குழந்தைக்கு என்ன தெரியும்? அவள்தான் உன் வாழ்வின் ஒளி விளக்கு. நான் வருகிறேன், என்ன வருகிறாயா ஆக்ராவுக்கு" என்று, உரிமையுடன் உறவுமொழிகளை உள்ளம் கலந்துவிட்ட நிலையில் கேட்டு நின்றார். வருகிறேன் என்று தலையைஆட்டிவைத்தேன். 'சரி, வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ற அவர் வெறுமனே செல்லவில்லை. நான் எதிர்பாராத வகையில், துணிவு வேண்டும் என்ற தன் மொழிக்கேற்ப, விழிகளில் குறும்பினைத் தேக்கி, அழகினைக் கூட்டி நிறுத்தி, என் வாழ்விலும் கனிச்சாறு பெய்துவிட்டு இதயத்தைக் கவர்ந்து சென்றுவிட்டார்.

பாலையாகிவிட்ட என் வாழ்வு சோலையாகும் என்றுதான் என்னை என்வசமிழக்கலானேன். இன்று நான் கிடக்கும் கருகிவிட்டநிலை அடைவேன் என்ற முன்னறிவு இருந்திருந்தால், அவர் இதழ்கள் இச்சிக்கும் இன்பமாக அல்ல—நச்சு இதழ்களாகத் தோன்றியிருக்கும். புத்துணர்வு பெற்றவர் புதுமைக் கருத்துடையவர்; இளம் வாலிபர்; இனிய கனவுகளைக் காணுபவர்; வனப்புமிக்கவர்; வலிய இதயம் படைத்தவர் என்று எண்ணலானேன். கள் குடிக்க, அது மேலும் மேலும் வேட்கை எழுமாமே! அதுபோல, அவரது இனிய பேச்சும், நாகரிக நடத்தையும், கவர்ச்சிமிக்கவாழ்வும், துணிச்சலான அறிவுக் கொள்கையும், கண்டு பழகும் வாய்ப்பும் ஏற்பட்டதால், என்னை அவரிடம் ஒப்படைத்து விட்டேன். மேலும், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு, தாஜ்மகால் பார்க்கச் சென்றபோது ஏற்பட்டதால், என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. உணர்ச்சிக்கு உட்பட்டேன். உலக நடப்பினை ஒதுக்கினேன். சிந்திக்க மறுத்துவிட்டேன். எண்ணத்தில் எழுந்துவந்த ஐயங்களுக்கும் அச்சங்களுக்கும் அவரையே எதிர்நிறுத்திச் சமாதானம் கூறிக்கொண்டேன். வாழ்வின் சோலைக் காட்சிகளில் என் இதயக் கனவுகளைப் பதிய வைத்தாலும், தாபம் கொண்டு தவித்த எனக்கு, அவருடைய வாழ்வுத் திட்டங்களையும், வகுத்திட்ட வழிகளையும் கேட்கும்போது தேன் கனையில் மூழ்கலானேன். என்னை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். இன்பத்தின் எல்லை இதுதானா என்ற கீதமிசைக்கலானேன். அந்த இன்பத்தில் எனது சிந்தனை கனவுகளில் மூழ்கியிருந்ததே தவிர, தெளிவுடன் இல்லாமல் போய்விட்டது.

[அடுத்த இதழில் முடியும்]

சென்னை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

அக்டோபர் 17, 18-ம் (சனி, ஞாயிறு) நாட்களில்

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
டி. கே. சீனிவாசன்	இராம. அரங்கண்ணல்

இரு நாட்களிலும்

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள்—கலைஞர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

இசை:

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா

மு. கருணாநிதி
நடிக்கும்
'உதயசூரியன்'
நாடகம்

இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராசேந்திரன்
நடிக்கும்
'புதுவெள்ளம்'
நாடகம்

வரவேற்புக்குழுத் தலைவர்
கோ. செங்குட்டுவன்

பொருளாளர்
அ. பொ. அரசு
(சென்னை மேயர்)

செயலாளர்கள்
கே. எம். கண்ணபிரான்
வி. இளஞ்சேரலாதன்

தொண்டர்படைத் தலைவர்:—தி. சு. நல்லதம்பி எம். சி.